பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Saturday மெயில்
02 - 58
06-11-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



# ஒபாமாவின் விஜயமும் இந்திய வியாபாரமும்

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைமருந்தைவிட மது ஆபத்து

சமூக மட்டத்தில் மதுவின் பாதகந்தான் அதிகம். ஹெரோயின் மற்றும் கொக்கெயின் போன்ற போதை மருந்துகளை விட மதுபானம் ஏற்படுத்தும் பாதிப்புத்தான் அதிகம் என்று பலராலும் மதிக்கப்படுகின்றதென லான்செட் மருத்துவ சஞ்சிகை கூறுகிறது.

போதை மருந்துகளால் தனி நபர்களுக்கு மாத்திரமல்லாமல் பரந்துபட்ட சமூகத்துக்கே ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அளவிடுவதற்கான புதிய மதிப்பீட்டு முறை ஒன்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

மதுபான பாவனை பாதக விளைவுகள் குறித்து இங்கு பிரிட்டிஷ் சமுகத்தில் பல விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.ஆனால் இந்த அறிக்கை இந்த விவகாரத்தை மேலும் ஒரு படி முன்னே கொண்டு செல்கிறது.கொக்கெயின் மற்றும் ஹெரோயின் ஆகியவற்றினால் சமூகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மதுபானம் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று இந்த அறிக்கை கூறுகிறது.

சுகாதார ரீதியாகவும் குற்றவியல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் 16 வகையிலான பாதகத்தை ஏற்படுத்தும் 20 போதைப்பொருட்களை பட்டியலிட்டபோது அதில் மது 72 புள்ளிகளையும் ஹெரோயின் 55 புள்ளிகளையும் முகரும் கொக்கெயின் 54 புள்ளிகளையும் பெற்றன.

ஒரு தனிநபரின் சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பட்டியலில் மது நான்காவது மோசமான மூலமாக இருக்கிறது.ஆனால் இந்த அறிக்கையின் முடிவு,மதுபானம் தான் பரந்துபட்ட சமூக மட்டத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை பிரதிபலிக்கிறது.

இந்த அறிக்கையை தயாரித்துள்ள முக்கியமானவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போதைப்பொருள் குறித்த கொள்கைகள் பற்றிய வெளிப்படையான விமர்சனங்களை முன் வைத்ததற்காக ஒரு வருடத்துக்கு முன்னதாகவே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



பிரிட்டனில் போதைப்பொருட்கள் குறித்த சட்டங்கள் காலாவதியானவை என்று அவர் கூறுகிறார்.இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளை அரச கொள்கையாக்கத்தின் போது கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஆனால் இந்தக் கருத்துடன் மாறுபடுவர்கள் இந்த ஆய்வு ஒரு போலி விஞ்ஞானம் என்று விபரிக்கிறார்கள்.அந்த போதைப் பொருட்களின் பட்டியலில் இருப்பவற்றில் மது மாத்திரமே சட்டபூர்வமான போதை மருந்து என்பதால் அது சமூகத்தில் பரந்துபட்ட அளவில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகிறது என்ற முடிவில் எந்தவிதமான ஆச்சரியமும் கிடையாது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

லண்டனில் உள்ள மதுபானக் கடைகளில் மது அருந்துபவர்கள் கூட இந்த ஆய்வின் முடிவு குறித்து திருப்தி அடையவில்லை.

எதிர்காலத்தில் இந்த விடயம் குறித்து மேலும் விவாதங்கள் தொடர்வதற்கு தற்போதைய விவாதம் மிகவும் முக்கியமானது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.பிரிட்டனை விட அரைவாசியளவுக்கே மது அருந்தப்படுகின்ற சுவீடன் போன்ற நாடுகளிடம் இருந்து பிரிட்டன் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன.அரசாங்கம் இந்த விடயத்தில் புதுமையான அணுகுமுறையை கைக்கொண்டால் தான் அது முடியும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

## ஒபாமாவின்...

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று சனிக்கிழமை இந்தியா வரும் நிலையில், அவரின் வருகைக்கு ஆதரவானதும் எதிரானதுமான நிலைப்பாடுகள் இந்திய அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ளதால் ஒபாமாவின் விஜயம் சர்ச்சைக்குரியதொன்றாகவே மாறிப்போயுள்ளது.

ஒபாமாவின் இந்திய விஜயத்தினால் அமெரிக்கா–இந்தியாவிடையேயான உறவுகளில் பாரிய திருப்புமுனை ஏற்படப்போகின்றது. ஒபாமாவின் விஜயம் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது என்றெல்லாம் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் உண்மையில் ஒபாமாவின் வருகையில் இந்தியாவின் வியாபாரமே பிரதான விடயமாகவுள்ளது.

அமெரிக்காவிடம் என்னென்ன வாங்குவதற்கான கோரிக்கைகளை விட ஒபாமாவின் இந்தப் பயணத்தில் ஒப்புக்கொள்ளப் போகிறது இந்திய அரசு என்று வந்துள்ள செய்திகள் இலை;

இந்திய விமானப்படைக்கு 126 சண்டைபோடும் திறன் கொண்ட குண்டுவீச்சு விமானங்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மொத்த மதிப்பு 10 பில்லியன் டொலர். இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு அமெரிக்காவின் போயிங் லாக்ஹீட் மார்ட்டின் உள்ளிட்ட 6 அயல் நாட்டு நிறுவனங்கள் போட்டியிடுகின்றன. இதனை அமெரிக்கா குறிவைத்துள்ளது.

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுக்குப் போய்விடும் சாத்தியம் உள்ளதை அறிந்த ஒரு நிறுவனம் தனது போர் விமானமே மிகச் சிறந்த சண்டைபோடும் திறனுடன் கூடிய குண்டுவீச்சு விமானம் என்று கூறி வாரமொருமுறை வரும் ஆங்கில இதழில் விளம்பரம் அளித்துள்ளது. எப்போதாவது இராணுவத் தளபாட விற்பனை தொடர்பான விளம்பரத்தை நாம் கண்டிருக்கிறோமா?

நீண்டதூரம் இராணுவ தளபாடங்களைக் கொண்டு செல்லக்கூடிய 10 இராணுவ போக்குவரத்து விமானங்களை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. அமெரிக்கத் தயாரிப்பான சி17 குளோப்மாஸ்டர் அந்த ஓடரை தட்டிச் செல்லும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்த மதிப்பு 5.8 பில்லியன் டொலர்கள்.

கடந்த ஆண்டு அமெரிக்கத் தயாரிப்பான பி–18 விமானங்களுக்கான வாங்கு ஒப்பந்தத்தை இந்தியா அளித்துள்ளது. கடற்பரப்பில் கண்காணிப்புச் செய்யும் வல்லமை கொண்ட 8 விமானங்களை வாங்க அந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. அதன் மதிப்பு 2.1 பில்லியன் டொலர்கள். இப்போது இதே ரக விமானங்கள் மேலும் 4 ஐ வாங்க ஒப்பந்தம் அளிக்கப்படவுள்ளதாம். மதிப்பு 1.1 பில்லியன் அதாவது இந்தியா தயாரித்து வரும் இலகுரக சண்டை விமானங்களுக்கான (Light Combat Aircraft-LCA) இயந்திரங்கள் வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி தயாரிப்பான எஉ414 அந்த ஒப்பந்தத்தைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவைகள் எல்லாவற்றையும் விடப் பிரதானமானது அணுசக்தி உலைகள் வாங்கும் ஒப்பந்தம். அதற்கான அணு விபத்து இழப்பீடு பொறுப்புச் சட்டத்தில் ஒரு சிறிய மாற்றம் செய்யப்பட்டு அமெரிக்காவின் ஜெனரல் எலக்ட்ரிக் வெஸ்டிங்ஹெவுஸ் ஆகியன அணுவுலைகள் விநியோகம் செய்ய வழிவகுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவே இந்திய–அமெரிக்க இராஜதந்திர கூட்டாண்மை என்பது. இந்தியா கடந்த ஆகஸ்ட் மாதம் வந்த அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கொள்கை வகுப்பிற்கான கூடுதல் செயலர் மைக்கேல் ஃபிளோர்மே, இந்தியா–அமெரிக்கா இடையிலான இராஜதந்திர இராணுவக் கூட்டாண்மையை இவ்வாறு விளக்கினார். பாதுகாப்பு வர்த்தகம், இராணுவங்களுக்கிடையிலான பயிற்சி,தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவைகள் மட்டுமன்றி, இந்தியாவின் பாதுகாப்பை முழுமையாக அமெரிக்காவின் பார்வைக்குட்படுத்தும் லாஜிஸ்டிக் சப்போர்ட் அக்ரிமெண்ட் (எல்.எஸ்.ஏ.) கம்யூனிக்கேஷன் இண்டரோபெராபிலிட்டி அண்ட் செக்யூரிட்டி மெமோரண்டம் அக்ரிமெண்ட் (சிஸ்மோ), பேசிக் எக்ஸ்சேஞ்ச் அண்ட் கோவாபரேஷன் அக்ரிமெண்ட் ஃபார் ஜியோஸ்பாசியல் கோவாப்ரேஷன் (பீகா) ஆகியவற்றிலும் இந்தியா கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கத் தரப்பு விரும்புகிறது. ஆனால், இவை யாவும் இந்தியாவிற்கு எப்படிப் பயனளிக்கும் என்பதில் இந்தியத் தரப்பு சந்தேகங்கள் கொண்டுள்ளது. எனவே, இந்த மூன்று ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

இவைகளைத் தாண்டி அமெரிக்கா விரும்பும் மற்றொரு முக்கிய அம்சம், தங்களுடைய இறக்குமதிக்கு எதிராகவுள்ள இந்தியாவின் இறக்குமதி விதிமுறைகள் சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கை ஆலோசகரான மைக் ஃபுளோர்மே கூறியதுபோல, அமெரிக்காவின் ஏற்றுமதிகளுக்கு இந்தியா ஒரு மிகப்பெரிய சந்தை. அதேநேரத்தில், அமெரிக்காவில் முதலீடு செய்வதற்கான ஊற்று. இதனை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவின் ஏற்றுமதிகளுக்குள்ள தடையை நீக்க ஒபாமா பேசுவார் என்று கூறினார்.

எனவே, அமெரிக்காவின் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடைகளை நீக்குவது என்பது முக்கியமான விவாதப் பொருளாக இருக்கும்.

கடந்த சில மாதங்களாக இந்திய அரசும் அதன் அமைச்சர்களும் ஹெச் 1 பி, எல் 1, எல் 2 விசா கட்டணங்களை அமெரிக்கா உயர்த்தியதை எதிர்த்துப் பேசி வந்தார்கள். அது குறித்து அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியுடன் பேசியதாகவெல்லாம் செய்திகள் வந்தன. ஆனால், ஒன்றுமே நடக்கவில்லை. அது குறித்து ஒபாமாவின் இந்தியப் பயணத்தில் பேசப்படுமா? ஒரு பேச்சும் இல்லை.


இரண்டாவதாக அமெரிக்க அரசு ஒப்பந்தங்களைப் பெறும் நிறுவனங்கள், அந்தப் பணிகளை அயல்நாடுகளில் கொடுத்து நிறைவேற்றக்கூடாது என்று அமெரிக்காவின் ஒஹையோ மாநிலம் பிபிஓவிற்குத் தடை விதித்தது.இந்தத் தடைக் கொள்கையை பராக் ஒபாமாவும் ஆதரித்தார். அது குறித்து இந்தப் பயணத்தில் பேசப்படுமா? என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் முறையாக செயற்படுத்தப்பட்டு பாராளுமன்றம் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் எம்.பி.யான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய



பேட்டியிலேயே பேராசிரியர் விஜேசிங்க இந்தக் கருத்தை வலியுறுத்தினார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: உங்களது கல்வி, குடும்ப பின்னணி பற்றி?**

**பதில்:** நான் எனது பாடசாலைக் கல்வியை கல்கிஸ்ஸை சென்.தோமஸ் கல்லூரியில் மேற்கொண்டேன். அதன் பின்னர் 17 ஆவது வயதில் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலாநிதி பட்டப்படிப்பை அங்கு நிறைவு செய்தேன். 1979 ஆம் ஆண்டு மீண்டும் நாடு திரும்பிய நான் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கற்பிக்க ஆரம்பித்தேன். பின்னர் அரசியல் காரணங்களால் அதிலிருந்து விலகி தனியார் துறையில் ஈடுபட்டேன்.

பிரிட்டிஷ் கவுன்ஸிலிலும் பணிபுரிந்தேன். அதன் பின்னர் அரசியலில் பிரவேசித்து லிபரல் கட்சியின் தவிசாளராகவும் 1987 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டேன். 1992 ஆம் ஆண்டு மீண்டும் பல்கலைக்கழகம் சார்ந்த பணிகளில் ஈடுபட ஆரம்பித்தேன். இதன் பின்னரே 2007 ஆம் ஆண்டில் அரச சமாதான செயலக பணிப்பாளராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டேன். அந்தப் பதவியை வகிக்கும் போதே 2008 ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவ மனிதஉரிமைகள் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டேன். அதன் பின்னரே 2010 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். எனது தந்தை முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சேம் விஜேசிங்க. எனக்கு ஒரு சகோதரரும் சகோதரியும் இருக்கின்றனர்.

**கேள்வி: அரசியல் பிரவேசத்துக்கான உங்களது நோக்கம்?**

**பதில்:** நான் ஏற்கனவே தந்தையுடன் பாராளுமன்றம் சென்றிருப்பதால் அரசியல் எனக்குப் புதிதான ஒன்றாக இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி எது செய்தாலும் சரி என்று கொழும்பு மக்கள் நினைக்கின்றனர். டட்லி சேனாநாயக்கவிடம் இருந்த அரசியல் பண்பாடு ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு இருக்கவில்லை. அவரது ஆட்சி புதுமையாகவே இருந்தது. 1983 ஆம் ஆண்டு அவரது ஆட்சியில் யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட போது நாம் அதை எதிர்த்தோம். பொருளாதாரத்தைப் பொறுத்த வரை அனைத்தையும் அரசாங்கம் வைத்துக் கொண்டு செய்ய முடியாது. எனினும் ஜே.ஆர்.ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தைப் பயன்படுத்தி தனது தனவந்த விசுவாசிகளுக்கே வர்த்தக வாய்ப்பளித்தார்.

**கேள்வி: முன்பிருந்தே பாராளுமன்ற நடைமுறைகள் பற்றி தெரிந்தவர் என்ற வகையில் தற்போதைய பாராளுமன்ற நடைமுறைகள் பற்றி எவ்வாறு உணர்கிறீர்கள்?**

**பதில்:** என்னைப் பொறுத்தவரை பாராளுமன்ற தெரிவுக் குழுக்களை செயற்படுத்த வேண்டும். 20 வருடங்களாக அவற்றில் பெரும்பாலானவை சரியாகச் செயற்படாமல் கிடக்கின்றன. அதில் எவரும் கலந்துகொண்டு யோசனைகளை முன்வைப்பதாக இல்லை. தனிப்பட்ட விடயங்களை மட்டுமே கொண்டு வருகின்றனர். பொதுக்கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் பற்றிப் பாராளுமன்றக் குழு (கோப்) ஆகியவற்றுக்குக் கூட 5 வருடங்களாக அழைக்கப்படாத நிறுவனங்கள் இருக்கின்றன. எனவே, கோப் தலைவர் அமைச்சர் டியூ குணசேகர இப்போது பணிகளை பகிர்ந்தளித்துள்ளார். இதன் மூலம் அந்தக் குழுவிலுள்ள 239 நிறுவனங்களையும் 2 வருடங்களுக்கு ஒரு முறையாவது அழைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது முன்னர் குழுவின் கேள்விக்குப் பதிலளிக்காவிட்டால் ஒன்றுமில்லை. ஆனால் தற்போது ஒரு மாதத்திற்குள் பதிலளிக்க வேண்டுமென வரையறை விதிக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை பாராளுமன்றம் பலப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி: பாராளுமன்றத்தில் தற்போதைய நடத்தைகள் குறித்து திருப்தி கொள்கிறீர்களா?**

**பதில்:** என்னைப் பொறுத்தவரை இதற்கு முக்கியமாகத் தேர்தல் முறைமையானது தெளிவில்லாத ஒன்று. எம்.பி.க்களுக்கென்று தொகுதி இல்லை.

மாவட்ட அடிப்படையில் எம்.பி.க்கள் தெரிவாவதால் அவர்கள் அலைந்து திரிய வேண்டியிருக்கிறது. தொகுதிகளுக்குச் சென்று பணிபுரிய நேரம் போதாது. நாம் 80 களிலேயே தற்போதைய தேர்தல் முறைமையை எதிர்த்தோம். விகிதாசார முறைமை மற்றும் தொகுதிவாரி முறைமை ஆகிய இரண்டும் தலா 50 சதவீதம் கலந்த தேர்தல் முறைமையொன்றுக்கான யோசனையை நாம் அன்று முன்வைத்தபோது ஜே.ஆர்.ஜெயவர்தன அதை எதிர்த்தார். என்னைப் பொறுத்தவரை புதிய தேர்தல் முறைமையொன்று அவசியம்.

## 'புதிய தேர்தல் முறை அவசியம்'

**கேள்வி: மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** அடுத்தவர்களையும் மதித்து, அடுத்தவர்கள் பற்றியும் சிந்தித்து செயற்படுங்கள். அது பன்முகத் தன்மையின் அடையாளம். அண்மையில் நான் இந்தியாவில் பல்கலாசாரம் பற்றிய நிகழ்வொன்றில் கலந்துகொண்டேன். அதன்போது அங்கு வைக்கப்பட்டிருந்த பூச்செண்டில் இருந்த அனைத்து மலர்களினதும் முக்கியத்துவம் பற்றி சுட்டிக்காட்டிப் பேசினேன். ஆகவே ஏனைய மக்களின் கலாசாரத்தையும் ஏற்று செயற்பட வேண்டும்.

டிட்டோ குகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒபாமாவும் தென்னைமரமும்

மும்பையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா செல்லும் இடங்களைக் கொமாண்டோப் படையினர் ஆய்வு செய்தனர். ஜனாதிபதி பராக் ஒபாமா நான்கு நாள் அரசு முறைப் பயணமாக நாளை சனிக்கிழமை இந்தியா வருகிறார். முதலில் அவர் மும்பை வந்திறங்கவுள்ளார். இதையொட்டி மும்பை நகரில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்திய உளவுப்பிரிவினர், மத்திய பாதுகாப்புப் படையினர், மாநில பொலிஸாருடன் அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்புப் பாதுகாப்புப் படையினர், அந்நாட்டு உளவுப் பிரிவினரும் மும்பையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஒபாமா செல்வார் என எதிர்பார்க்கப்படும் இடங்களில் மகாராஷ்டிர பொலிஸ் கொமாண்டோக்களான 'போர்ஸ் ஒன்" படையினர் முகாமிட்டுள்ளனர். ஒபாமா மற்றும் அவருடன் வரும் குழுவினர் தங்கும் தாஜ் ஹோட்டல், டிரைடன்ட் ஹோட்டல், தாஜ் பிரசிடெண்ட், கிராண்ட் ஹயாத் ஹோட்டல்களை இந்தப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டனர்.

மேலும் சேவியர்ஸ் கல்லூரி, ஹோலி நேம் பள்ளி, மும்பை பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் ஏதோ ஒன்றுக்கு ஒபாமா செல்வார் என்று தெரியவந்துள்ளது. இந்த இடங்களும் பாதுகாப்புப் படையினர் வசம் வந்துவிட்டன.

ஒபாமா வருகையையொட்டி 'கேட்வே ஒவ் இந்தியா' பகுதியில் 3 நாட்கள் படகுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தாஜ் ஹோட்டல் அருகேயுள்ள வீதிகளும் இரண்டு நாட்கள் மூடப்படவுள்ளன. மேலும் ஒபாமா செல்லும் பாதைகளிலும் வெடி குண்டு நிபுணர்கள் சோதனையை நடத்த ஆரம்பித்துவிட்டனர்.

**தென்னை மரங்களில் தேங்காய்கள் அகற்றல்**

மகாத்மா காந்தி மும்பை வரும் போது தங்கும் மணி பவனை ஒபாமா பார்வையிட ஆர்வமாக உள்ளார். இதன் வளாகத்தில் ஏராளமான தென்னை மரங்கள் உள்ளன.

இந்த இடத்தைப் பார்வையிட்ட ஒபாமாவின் பாதுகாப்பு அதிகாரிகள், அங்கிருந்த மரங்களில் இருந்த தேங்காய்களை அகற்றுமாறு கூறியதையடுத்து மாநகராட்சி ஊழியர்கள் அவற்றை அகற்றினர்.

இதற்கிடையே தனது இந்தியப் பயணத்தையொட்டி இந்திய தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு ஒபாமா அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் கூறியதாவது;

பாகிஸ்தானிடம் நாங்கள் மென்மையாக நடந்துகொள்வதாகக் கூறமுடியாது. மும்பைத் தாக்குதல் நடந்ததில் இருந்தே, அத்தாக்குதலில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவதில் பாகிஸ்தானுக்கு சர்வதேசப் பொறுப்பு உள்ளது என்றும் இதை ஒளிவுமறைவின்றியும் முழுமையாகவும் விரைவாகவும் செய்து முடிக்கவேண்டும் என்றும் நாங்கள் பாகிஸ்தான் அரசை வலியுறுத்தி வருகிறோம்.

இது தொடர்பாக ஏற்கனவே அளித்த உறுதிமொழியை பாகிஸ்தான் நிறைவேற்ற வேண்டும். தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது, பாகிஸ்தானுக்கு மட்டுமின்றி ஆசிய பிராந்தியத்துக்கே நல்லது. தீவிரவாதிகளின் புகலிடங்களை அ[illegible] நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

எனது ஆசிய பயணத்தின் முதற்கட்டமாக இந்தியாவுக்குச் செல்கிறேன். ஏனென்றால் ஆசிய தொடர்புக்கு இந்தியாவைத்தான் அடித்தளமாக நான் கருதுகிறேன். மேலும் ஜி-20 போன்ற பன்னாட்டு அமைப்புகளுடனான தொடர்புக்கும் இந்தியாவையே அடித்தளமாகக் கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரை இந்தியாவும் அமெரிக்காவும் பிரிக்க இயலாத நட்புறவைக் கடைப்பிடிக்கின்றன.

நான் சந்தித்த தலைவர்களிலேயே அசாதாரணத் தலைவர், பிரதமர் மன்மோகன் சிங்தான். அந்த நல்ல நண்பருடன் இருதரப்பு உறவுகள் மட்டுமின்றி பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்தியாவின் எழுச்சி இரு நாடுகளுக்கு மட்டுமின்றி ஆசியாவுக்கும் உலகத்துக்குமே நன்மை பயக்கும்.

**காந்தியின் போதனைகள் - ஒபாமா புகழாரம்**

மகாத்மா காந்தி, தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை இந்தியாவில் கழித்தார். இந்தியாவுக்காகப் பாடுபட்டார். ஆனால், அவரது போதனைகள் உலகம் முழுவதற்கும் இப்போதும் பொருத்தமானவையாக உள்ளன. அவரது பணிகள், அமெரிக்காவில் கறுப்பின உரிமைக்காகப் போராடிய மார்ட்டின் லூதர்கிங் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. அதன்மூலம் அமெரிக்காவில் நல்ல மாற்றம் ஏற்பட காந்தி உந்து சக்தியாகத் திகழ்ந்தார். இந்தியாவுக்குச் செல்வதன் மூலம் அவரது நினைவுகளைக் கௌரவிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ஒபாமா இந்தியா வருவதையொட்டி அவர் எழுதிய புத்தகங்களும் அவரைப் பற்றிய புத்தகங்களும் அதிக அளவில் விற்பனையாகி வருகின்றன. இந்திய நகரங்களில் உள்ள புத்தகக் கடைகளில் ஒபாமா எழுதிய புத்தகங்களும் ஒபாமாவைப் பற்றிய புத்தகங்களும் அதிகமாக விற்பனையாகி வருகின்றன. இதனால் புத்தகக் கடைகளில் அதிக அளவில் ஒபாமாவைப் பற்றிய புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. புலிட்சர் விருது பெற்ற பத்திரிகையாளர் பாப் உட்வோர்ட் எழுதிய 'ஒபாமாவின் யுத்தங்கள்" என்ற புத்தகம் அதிக அளவில் விற்பனையாகி வருகிறது. இந்தப் புத்தகத்திற்குப் பெரும் கிராக்கி உருவாகியுள்ளதால் முன்பதிவு செய்து புத்தகங்களை வாங்கும் நிலை [illegible]ள்ளது. [illegible] புத்தகக் கடையில் கடந்த 10 நாட்களாக நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன. 70க்கும் அதிகமானோர் முன்பதிவு செய்கின்றனர். 464 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் இந்தியாவில் 970 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு அடுத்த நிலையில் ஒபாமா எழுதிய 'என் தந்தையின் கனவுகள்' என்ற புத்தகம் உள்ளது. இந்தப் புத்தகமும் அதிக அளவில் விற்பனையாகிறது. ஒபாமாவின் சுய சரிதையான இந்தப் புத்தகம் 1995 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஒபாமா எழுதி 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'நம்பிக்கையின் துணிச்சல்' என்ற புத்தகமும் விற்பனையில் சாதனை படைத்து வருகின்றது. இதேபோன்று ஒபாமாவைப் பற்றிய புத்தகங்களும் ஒபாமாவின் மனைவி மிச்சேல் எழுதிய புத்தகங்களும் அதிகமாக விற்பனையாகி வருகின்றன. இது குறித்துப் புத்தக விற்பனையாளர்கள் கூறுகையில்;

கடந்த 10 நாட்களாக ஒபாமாவைப் பற்றிய புத்தகங்களுக்கு பெரும் கிராக்கி உருவாகியுள்ளது. வாரத்திற்கு 10 முதல் 15 வரையில் விற்பனையாகி வந்த புத்தகங்கள் தற்போது ஒரு நாளைக்கு 80 முதல் 100 வரை விற்கின்றன என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுறும் குடாநாடு




தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு சுற்றுலா செல்லும் தென்பகுதிப் பயணிகளில் சிலர் நடந்து கொள்ளும் இனவாத ரீதியான நடவடிக்கைகளால் வெறுப்பும் வேதனையுமடைந்துள்ள குடாநாட்டு மக்கள் தமது நிலையை எண்ணியும் தமது அரசியல் தலைமைத்துவங்களின் இயலாத் தன்மையை எண்ணியும் மனதுக்குள் குமுறிக் கொண்டிருக்கின்றனர்.

வந்தாரை வரவேற்று உபசரிப்பதில் தனித்துவமாகத் திகழ்ந்துவரும் தமிழ் மக்கள் இன்று தமது இடங்களை நோக்கி சுற்றுலா என்ற பெயரில் படையெடுத்து வரும் தென்னிலங்கைப் பயணிகள் தொடர்பில் அச்சமும் சந்தேகமும் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு சுற்றுலாப் பயணிகளாக வரும் இனவாத சிந்தனையும் அதிகார ஆணவமும் கொண்ட சிலரே காரணமாகவுள்ளனர்.

தென்னிலங்கை உட்பட பல பகுதிகளிலிருந்தும் வடக்கு நோக்கி வருகின்ற பெரும்பான்மை சமூகத்தினர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அங்குள்ள மக்களை மிரட்டுவதிலும் அவர்களின் பாரம்பரிய இடங்கள், மதஸ்தானங்களின் புனிதத்தன்மைகளைச் சீரழிப்பதிலும் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து பெரும்பான்மை சமூகத்தினரின் வடக்கு நோக்கிய பயணம் அதிகரித்துள்ளது. இருந்தும் கடந்த சில மாதங்களாக இந்தப் பயணிகளின் மோசமான செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

'கடந்த வாரம் நல்லூர்க் கோயிலை சுற்றிப்பார்க்க வந்த (தென்மாகாணம்) மாத்தறையைச் சேர்ந்த பெரும்பான்மையினர் கோயில் சூழலை அசுத்தமாக்கியுள்ளனர். கோயில் வாசலில் கூட பாதணிகளுடன் நடமாடித் திரிகின்றனர். உணவுப் பொருட்களைச் சாப்பிட்டுவிட்டு கடதாசிகளை, கழிவுகளை, மீதிகளை அந்த இடத்திலேயே போடுகின்றனர். புகைத்துக்கொண்டும் சத்தம் போட்டுக்கொண்டும் இருப்பதால் கோயிலுக்குச் செல்வது பெரும் சிரமமாகவுள்ளது' என நல்லூரைச் சேர்ந்த வயோதிபரொருவர் கூறினார்.

ஒரு புனிதஸ்தலத்திலே தூய்மையும் அமைதியும் பேணப்பட வேண்டிய நிலையில் இவர்கள் மோசமாக நடந்துகொள்வது கவலையளிக்கிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேபோன்று யாழ்ப்பாண மக்களின் கலாசார, பாரம்பரிய விழுமியங்களை அழிக்கும் செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இசை நிகழ்வுகள், களியாட்டங்களைத் தொடர்ந்து வடக்கில் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அப்பகுதி மாணவர்களின் கல்விநிலை பாரிய வீழ்ச்சியடைந்து செல்கிறது. மீள் குடியேற்றம் என்ற போர்வையில் தமிழ்ப் பிரதேசங்களில் முன்னர் சிங்களவர் குடியிருந்தார்கள் எனக் கூறி தெற்கு சிங்களவர்களைக் குடியேற்றுகின்றனர்.

வடக்கின் பாதுகாப்புக்காக பாடுபட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களிற்கு தனிமரியாதை கொடுக்க வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களின் வீடுகளை உரிமை கோருகின்றனர். அ[illegible] சிங்களவர்களைக் குடியேற்றுகின்றனர்.

வியாபாரம் உள்ளிட்ட அனைத்து வேலைகளிலும் யாழ்ப்பாணத்தில் இன்று பெருமளவு சிங்களவர்களே இணைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக குருநகரைச் சேர்ந்த மீனவரொருவர் கூறுகையில்;

'கொழும்புத்துறை, குருநகர் உள்ளிட்ட மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்ற இடங்களில் இன்று பெருமளவு சிங்கள மீனவர்கள் தொழில் மேற்கொள்கின்றனர். யுத்தகாலத்தில் மீன்பிடித் துறையினால் எமக்கு பெருமளவு பணமீட்ட முடிந்தது. இன்று அந்த நிலை மாறியுள்ளது. பொருளாதாரச் சிக்கல் நிலவுகின்றது. அரசு இங்கு அபிவிருத்தி என்று கூறி சிங்களவர்களுக்கு வேலைகளைப் பெற்றுக் கொடுப்பதைத் தவிர தமிழ்த் தொழிலாளர்களுக்கெனத் தனியான திட்டங்களை முன்னெடுக்கவில்லை. எமது தொழிலுக்கென தனியான படகு, வலைகளையோ ஏனைய உபகரணங்களையோ அரசு பெற்றுத்தரவில்லை.

எமது பிரதேசத்தில் நாம் மேற்கொள்ளும் தொழிலையாவது ஒழுங்காக மேற்கொள்ள அரசு வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும்' அம்மீனவர் கூறினார்.

சிங்கள ஆசிரியர்களை இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இணைத்துள்ளனர். நிறுவனங்கள், கம்பனிகளில் உயர் அதிகாரிகளாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களை சேர்த்துள்ளனர்.

தமிழ் மக்கள் பரந்து காணப்பட்ட பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றி, அவர்களின் பாரம்பரியம், கலை, கலாசா[illegible]ற்றை சீரழித்து முடக்கும் [illegible] அரசு செயற்படுகிறது.

இதேவேளை சுற்றுலாவாகச் செல்லும் பெரும்பான்மையினர், இங்குள்ள ஹோட்டல் அதிகாரிகளிடம்,அநாகரிகமாக நடந்து கொள்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் விடுமுறைகளில் இங்கு வரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் ஹோட்டல்களில் தங்கிவிட்டு, அங்கிருந்து வெளியேறும்போது கட்டணங்கள் செலுத்தாது இராணுவத்தினரின் பெயரைப் பயன்படுத்தி,இவர்களை மிரட்டி விட்டு சென்று விடுகின்றனர். அதிகாரம்,அடக்குமுறையை பயன்படுத்துகின்றனர்.

இதேபோன்று யாழ்.பொது நூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி சுற்றுலாவாக வந்த பயணிகள், நூலகத்தை பார்வையிடுவதற்கு அனுமதி கோரியுள்ளனர்.அன்றையதினம் இலங்கை மருத்துவ சங்கத்தின் மாநாடு நடைபெற்றதால் உட்பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, உள்ளே நுழைந்து புத்தகங்களை வீசி நாசப்படுத்தியுள்ளதுடன் அங்கிருந்த பெண் ஊழியர்களுடனும் சேஷ்டை புரிந்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த பின்பும் தென்பகுதியினரால் யாழ்ப்பாண மக்கள் தொடர்ந்து துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அரசியல் ஆதயங்களுக்காகச் செயற்படுவார்களேயானால் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும்.


எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளவயதினரிலும் இரத்த அழுத்த நோய் வருமா?

இரத்த அழுத்த நோயானது பொதுவாக குறித்த வயதின் பின்பே ஏற்படுகின்றது. இளவயதினரில் பெரும்பாலும் பீடிப்பதில்லை. எனினும் உயர்குருதி அழுத்த நோய் அல்லது இரத்த அழுத்த நோய் அல்லது பிறசர் என்றால் ஏதோ ஒரு பயம் எம்மவரில். இவ்வாறு இருக்கும் நிலையில் இளவயதினரில் இரத்த அழுத்த நோய் என்றால் அது கவனிக்க வேண்டிய ஒன்று. அதிலும் விசேடமாகக் கூறின் அதற்கான காரணம் அறியப்பட வேண்டும். ஏனெனில் இவ்வாறு இளவயதினில் இரத்த அழுத்த நோய் ஏற்படும் போது அது பல கூட்டு விளைவுகளைக் கொண்டதாகவே அமையும். ஒவ்வொரு விளைவையும் சீர்செய்வதனை விட அதற்கான மூல காரணத்தை கண்டறிவதே சாலவும் சிறந்ததாகும். அதனை விட சீர் செய்வதே ஏற்புடையதுமாகும்.




அங்கப் பெருக்க நோய் acromegaly மற்றும் சிலவகை சிறுநீரகப் பாதிப்பு வேறு சில நோய் நிலைகளிலும் உயர் குருதி அமுக்கம் இளவயதினரில் ஏற்படலாம். இங்கு அங்கபெருக்க நோயானது வளர்ச்சி ஓமோனின் மிகை அளவிலான செயற்பாட்டினால் ஏற்படுகின்றது. இதில் என்புகளின் வளர்ச்சி முற்றுப் பெற முன்னர் இந்நோய் நிலை ஏற்படும் போது அது பேருருவ நிலை எனப்படும். இந்நோயின் போது நோயாளியின் உருவத்தில் அதாவது தோற்றத்தில் பல வெளிப்பாடுகள் காண்பிக்கப்படும். அதாவது நாடியினமைப்பு, உள்ளங்கைகளின் பரந்த தன்மை மற்றும் பாதங்களின் வடிவமைப்பு இதனோடு கைவளையல்கள், பாதணிகள் அளவின்றிப் போதல் என்பனவும் ஏற்படலாம். மேலும் தலைவலி, பார்வைக் குறைபாடுகள் போன்றனவும் இனங்காணலை இலகுபடுத்துவனவாகவே அமைகின்றன. இவற்றோடு பருமனடைதல், பால் சுரத்தல்,உடல்பருத்தல், பாலியல் நாட்டமின்மை, ஒழுங்கீன மாதவிடாய் போன்றனவும் காணப்படும்.



இன்னும் குருதியில் வளர்ச்சி ஓமோனின் செறிவு மற்றும் குருதிவெல்லச் செறிவு மற்றும் IGF செறிவு இவற்றை விட கபச்சுரப்பியின் கதிர் படங்கள் போன்றவற்றின் மூலம் இந்நோயானது இனங்காணப்படும். கபச்சுரப்பியானது அதன் செயற்பாட்டில் மாற்றமடையும் போது உடலில் ஓமோன்களின் சமநிலை பாதிப்புறுகின்றது. இதனால் பாலியல் நாட்டமின்மை, பால் சுரத்தல், மாதவிடாய் ஒழுங்கீனம் போன்றனவும் இதன்படி நிலைகளாக ஏற்படலாம்.கபச்சுரப்பியானது வீக்கம் அடைவதனால் அதன் அருகிலுள்ள பார்வை நரம்பு நசுக்கப்படுவதனால் பார்வை புலம் எல்லைப்படுத்தப்படுகின்றது.


சுகதேகி


நோயின் பின்

இந்நோயானது இனங்காணப்பட்டு குணப்படுத்த தவறும் பட்சத்தில் இதயச் செயலிழப்பு மற்றும் முடியுருநாடிசார் நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு. இதற்கான சிகிச்சையாக கருதும்போது

1. சத்திர சிகிச்சை மற்றும்
2. கதிரியக்க சிகிச்சை
3. மருத்துவ சிகிச்சை போன்றன

அமைகின்றன.

இச்சிகிச்சையின் போது GH, IGF-1 போன்றன மதிப்பிடப்படுகின்றன. சத்திர சிகிச்சையை கருதும் போது trans sphenboidal surgery யும் external radiotherapy ஆனது சத்திர சிகிச்சையின் பின்னும் வளர்ச்சி ஓமோனின் அளவு சாதாரண நிலையை எய்தாதவிடத்து மேற்கொள்ளப்படுகிறது.

இதை விட மருத்துவ சிகிச்சையாக

1. somatostatin receptor agonist,
2. dopamine agonist,
3. GH agonist

போன்றனவும் பயன்படுகின்றன. இள வயதினரில் இரத்த அழுத்தம் உயர்வாக உள்ளது என்றால் உபாதைக்குரிய காரணம் எதுவென்று அறிவதே சாலவும் நன்று.

டாக்டர்
வெ.நாகநாதன்
சிவாஜி மருத்துவ ஆலோசனை மையம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு வழிகாட்டும் செல்போன்




எப்போதும் எங்கேயும் யாருடனும் தொடர்பு கொள்ள செல்போன் மிகப்பெரும் உதவியாகவுள்ளது. ஆனால், இதே செல்போன் மூலம் பலர் குறுக்கு வழிகளையும் உருவாக்குகின்றனர். இதற்கு உதாரணம் தான் இந்தக் கதை. பெரிய பெரிய கண்காட்சிகளில் 'மேஸ்' எனப்படும் நூதன விளையாட்டு இடம்பெற்றிருக்கும். ஒரு வழியாகச் சென்று இன்னொரு வழியாக வெளியே வர வேண்டும். ஆனால், எந்த வழியாகச் சென்றாலும் ஏதாவது ஒரு இடத்தில் தடையிருக்கும். எனவே, உள்ளே நுழைந்தவர்கள் வெளியே வர முடியாமல் தவிப்பர். இந்த மேஸ் விளையாட்டுக்குப் புகழ் பெற்ற இடம் லண்டனில் உள்ளது. வில்ட்ஷயர் என்ற இடத்தில் லாங் லீட் சபாரி பூங்கா உள்ளது. இந்தப் பூங்காவில் தான் உலகின் மிகப்பெரிய மேஸ்,பெரிய புதர் செடிகளால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேஸ் அரங்கத்தில் நுழைபவர்கள் பல மணிநேரம் ஆனாலும் வெளியே வர முடியாமல் தவிப்பர்.

மூன்று கி.மீ. தூரம் உள்ள இந்த மேஸ் அரங்கத்தைச் சாதாரணமாகச் சுற்றி வரவே இரண்டு மணி நேரம் ஆகும். ஆனால், சமீபத்தில் இந்த மேஸ் அரங்கத்திற்குள் சென்ற சிலர் ஒரு சில நிமிடங்களில் மிகச் சரியாக வெளியே வந்தனர். குழப்பமான பாதையில் எப்படி அவர்களுக்கு வழி தெரிந்தது எனத் தெரியாமல் பூங்கா நிர்வாகிகள் முதலில் திணறினர். பின்னர் சிலரைப் பின்தொடர்ந்து சென்று பார்த்த போதுதான் உண்மை தெரிந்தது.

அவர்கள் அனைவரும் கையில் பிளாக்பெர்ரி செல்போனை வைத்திருந்தனர். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைக் கண்டுபிடிக்க உதவும் ஜி.பி.எஸ். எனப்படும் நவீன செயற்கைக்கோள் தொடர்பு வசதிமூலம் வழியை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இணையத் தளத்தில் 'கூகுள் எர்த்' சைட்டிற்குச் சென்று மேஸ் இருக்கும் இடத்தின் மேல் பகுதியை மொபைல் போனில் பார்த்து அதன் மூலம் சுலபமாக மேஸ் அரங்கத்தில் வழியை அவர்கள் கண்டுபிடித்தனர்.

இது குறித்து மேஸ் அரங்க மேலாளர் டிம்.பென்ட்லி கூறுகையில்; ஒவ்வொரு ஆண்டும் நான்கு இலட்சம் பேர் இந்த மேஸ் அரங்கத்தில் இருந்து வெளியே வர முடியாமல் தவிப்பது வழக்கம். உடனே, எங்கள் உதவியாளர்கள் அவர்களுக்குச் சரியான வழியைக் காட்டி வெளியே அனுப்புவர். சமீபகாலமாகச் சிலர் வெகு சுலபமாக வெளியே வந்தனர். அவர்கள் செல்போனில் வழிகாட்டும் மேப் மூலம் வெளியே வருவது எங்களுக்குத் தெரிந்தது. இனி பூங்காவிற்கு வருபவர்களிடம் செல்போனை வாங்கி வைக்கலாமா என யோசித்து வருகிறோம் என்றார்.

# கனவைப் பதியலாம்

கனவுகளை மின்னியல் ரீதியாகப் பதிவு செய்து அதற்கு கற்பிதம் கூற தாம் திட்டமிடுவதாக ஒரு அமெரிக்க ஆய்வாளர் கூறியுள்ளார்.

கனவுகள் ஏன் ஏற்படுகின்றன, எப்படி ஏற்படுகின்றன என்பதைக் கண்டறியப் பயன்படக்கூடிய மூளையின் உயர்மட்டச் செயற்பாடுகளைப் பதிவு செய்வதற்கான முறைமை ஒன்றைத் தாம் கண்டுபிடித்துள்ளதாக Journal Nature Scientists எனும் சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் அவர் தெரிவித்துள்ளார்.

கனவுகளைப் பதிவு செய்யக்கூடிய ஒரு இயந்திரத்தை உருவாக்குவதற்கான நோக்கம் என்பது ஒரு அலாதியான விடயம்தான். ஆனால், கலிபோர்னியாவில் உள்ள ஆய்வாளர் குழு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்காவது அது எவ்வாறு சாத்தியம் என்பது குறித்து விளக்குகிறது.




கனவைப் பதியலாம். ஒருவரது மூளையின் கலங்கள் அல்லது நியூரோன்கள் ஒரு விடயத்துடன் அல்லது ஒரு கருத்தியலுடன் தொடர்புபட்டதாக இருப்பதாக அந்த ஆய்வாளர்களின் ஒரு ஆய்வு கூறுகிறது. உதாரணமாகப் பரிசோதனைக்குட்படும் ஒரு தொண்டர்,நடிகை மர்லின் மன்றோவை நினைக்கும்போது அந்த நினைப்புடன் தொடர்புடைய அவருடைய மூளையில் இருக்கும் நியூரோன் பற்றிக் கொண்டு ஜொலிக்கும்.

பரிசோதனைக்கு வந்த தொண்டர்களுக்குத் தொடர்ச்சியான பல படங்களைக் காண்பித்தபோது பலதரப்பட்ட விடயங்கள்,பொருட்கள் மற்றும் கருத்தியலுடன் சம்பந்தப்பட்ட நியூரோன்களை ஆய்வாளர்களால் அடையாளம் காணமுடிந்தது.

தூங்கும் தொண்டர்களின் மூளையின் அலைகளைப் புரிந்துகொள்வதும் அதில் இருந்து அவர்கள் காணுகின்ற கனவுகளைப் புரிந்துகொள்ள விழைவது என்பவைதான் ஆய்வாளர்கள் எடுக்கப்போகின்ற அடுத்த முயற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முறிகண்டிப் பிள்ளையாரின் நிலை

ஏ 9 நெடுஞ்சாலை ஊடாக பயணம் மேற்கொள்பவர்களில் முறிகண்டிப் பிள்ளையாரை தெரியாதிருப்போர் இல்லையென்றே கூறலாம். அந்தளவுக்கு பயணிகள், சாரதிகளின் அபிமானத்துக்குரியவராகவும் அன்புக் குரியவராகவும் இன்று நேற்றன்று காலா காலமாகத் திகழ்ந்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு வழித்துணை புரிபவராக முறிகண்டிப்பிள்ளையார் திகழ்கிறார்.

பல கட்ட யுத்த நடவடிக்கைகளின் போதும் தன்னையும் தனது இருப்பிடத்தையும் பாதுகாத்து இன்று வரை சொந்த மண்ணை விட்டு இடம்பெயராத முறிகண்டிப்பிள்ளையார் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தனிமரமானாலும் தற்போது அவரிடம் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி ஆசிபெற்றுச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

ஏ 9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டு தென்பகுதியிலிருந்து பயணங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது தென்பகுதி பயணிகள், சாரதிகள் பலரும் முறிகண்டிப் பிள்ளையாரின் மகிமை தெரியாததால் அவர் இடத்தில் தரித்து நின்று அவரை வணங்காது தமது பயணத்தை தொடர்ந்தாலும் தற்போது நிலைமை மாறி முறிகண்டிப் பிள்ளையார் ஆலய சூழல் 24 மணி நேரமும் மக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது.

இக் கண்கொள்ளாக் காட்சியை பார்க்கும் போது உள்ளம் பூரித்தாலும் அங்கு இடம் பெறும் சில கன்றாவிக் காட்சிகளைக் காணும் போது உள்ளம் வெம்பி வேதனையடைவதை தடுக்க முடியாதுள்ளது. நான் கடந்த வாரம் குடா நாட்டுக்கான பயணத்தை மேற்கொண்ட போதே இக் காட்சிகளைக் கண்டு வேதனையடைய நேரிட்டது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலய சூழல் எப்போதும் புனிதமாகப் பேணப்பட்ட பகுதி, புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த போது முறிகண்டிப் பிள்ளையார் ஆலய பகுதி ஒரு புனித பிரதேசமாகவே பேணிப் பாதுகாக்கப்பட்டது. அசைவம், மது, புகைத்தல் போன்றவை இப்பகுதியில் முற்றாக தடை செய்யப்பட்டிருந்ததுடன் ஆலய சூழலில் பாதணிகளுடன் நடமாடுவதும் தவிர்க்கப்பட்டிருந்தது.

அத்துடன், வன்னி மீதான பொருளாதார தடைகள் இருந்த காலப் பகுதியில் கூட இப் பகுதியில் பூஜைப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் மிகவும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக விருந்தது. ஆனால் தற்போது அனைத்துமே தலைகீழாக மாறிப் போயுள்ள நிலைமையையே என்னால் அவதானிக்க முடிந்தது.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலடியில் வந்து குவியும் பயணிகள் எவ்வித ஒழுங்கு விதிகளுமின்றி பாதணிகளுடன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் நடமாடுகின்றனர். கோயிலுக்கு செல்வதற்கு முன் கால், கை, முகம் கழுவ நீர் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும் தொட்டிப் பகுதிகளுக்கு பாதணிகளுடனேயே செல்வோர் அந்த நீரில் தமது பாதணிகளையும் கழுவி அப்படியே கோயிலுக்கு அருகிலும் செல்கின்றனர்.

இதனை விட கோயிலை சுற்றியுள்ள கச்சான் கடைகளைத் தவிர்ந்த ஏனைய கடைகளில் சிகரெட் வகைகள் தாராளமாக விற்கப் படுகின்றன. கோயிலடியில் இறங்கும் பலரும் சிகரெட்டுகளை வாங்கி அவ்விடங்களில் போடப்பட்டிருக்கும் கதிரைகள், வாங்குகளில் அமர்ந்திருந்து ஊதித் தள்ளுகின்றனர். கோயிலில் எரிக்கப்படும் கற்பூரத்தின் புகையை விட இவர்கள் ஊதித்தள்ளும் சிகரெட் புகையே அதிகமாகவுள்ளது.

இது ஒரு புறமிருக்க தவிச்ச முயல் அடிக்கும் வேலை போன்று இப்பகுதியில் விற்கப்படும் பொருட்களின் விலையும் இரு மடங்கு அதிகமாகவேயுள்ளது. சாதாரணமாக 5 ரூபாவுக்கு விற்கப்படும் கற்பூரம் இங்கு 10 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அதேபோல் சிறிய தேங்காய் ஒன்று 40 ரூபாவுக்கு விற்பனையாகிறது. கச்சான், கடலைகளின் விலைகளும் அதிகமாகவேயுள்ளன.

இது குறித்துக் கேட்டால், பொருட்கள் தட்டுப்பாடு, தூர இடங்களில் இருந்து கொண்டுவர வேண்டியுள்ளது. அதனால் தான் விலைகூட்டி விற்க வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர். சரி விலையைக் கூட்டி விற்றாலும் பரவாயில்லை ஆனால் கோயிலின் புனிதத்தன்மையை சீரழிக்கும் விதத்தில் பயணிகள் நடந்துகொள்வதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாமலுள்ளது.

ஆலயப்பகுதியில் பாதணிகளுடன் திரிவோர் வேண்டுமென்றே அந்தத் தவறை செய்யவில்லை. விளக்கமின்மை, வழிபாட்டுமுறை போன்றவற்றை தெரியாமலே அப்படி நடந்து கொள்கின்றனர். இதனை நிவர்த்திக்க மும்மொழிகளிலுமான அறிவித்தல் பலகைகளை ஆலயப்பகுதிகளில் வைத்தால் பயணிகள் அதனைப் பின்பற்றிநடந்துகொள்வார்கள்.

அதேபோன்று ஆலயப் பகுதிகளிலுள்ள கடைகளிலும் சிகரெட் வகைகளை விற்பனை செய்ய தடைவிதிக்க வேண்டும். இது தொடர்பில் இந்து அமைப்புகளும் பொது அமைப்புகளும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடினால் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் புனிதத்தன்மையை பேணிப் பாதுகாக்க முடியும்.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயமும் அப்பகுதியும் முன்பிருந்ததை விடவும் அழகுபடுத்தப்பட்டிருந்தாலும் அங்கு இடம் பெறும் இவ்வாறான செயல்களை தடுத்து நிறுத்துவதன் மூலமே ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேண முடியுமென்பதால் இது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

**கி.ரிஷிகேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவண்ணம் எவ்வண்ணம்...?

இடைமருதூர் கி.மஞ்சுளா

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்**
**இனி இந்த உலகுக் கெல்லாம்**
**உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர் வண்ணம் உறுவதுண்டோ?**
**மைவண்ணத் தரக்கிப் போரில் மழை வண்ணத் தண்ணலே-உன்**
**கைவண்ணம் அங்கு கண்டேன்;கால்வண்ணம் இங்கு கண்டேன்**

என்ற இந்தப் பாடலைப் படித்த உடனேயே பாமரருக்கும் கவிஞர் கண்ணதாசன்தான் நினைவுக்கு வருவார்.ஆனால் கண்ணதாசனின் 'பால்வண்ணம் பருவம் கண்டு' என்ற பாடலின் மூலம் எது தெரியுமா?கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கவிநயத்தில் மிளிர்ந்த மேற்குறிப்பிட்ட கம்பராமாயணப் பாடல்தான்!

ராமனின் குலகுருவான விசுவாமித்திரர் இப்பாடலில் ராமனின் பெருமையைக் கூறுகிறார். 'முன்பு நீ தாடகையை வதம் செய்தபோது உன் வில்லாற்றலை அங்கு கண்டேன்(கை வண்ணம்),அப்போது உன்னை மானுடப் பிறவியாய் கருதினேன்.ஆனால் கல்லைப் பெண்ணாக்கி அகலிகையின் சாபம் தீர்த்த போது உன் திருவடி(கால் வண்ணம்)பெருமையை இங்கு கண்டேன்-உன் திருவடிகளைக் கண்டபிறகுதான் நீ மானுடப்பிறப்பல்ல,மகாவிஷ்ணு அவதாரம் என்பதைக் கண்டுகொண்டேன்' என்கிறார்.ராமனைக் குறிப்பிடும்போது 'முகில்' வண்ணம் என்றும்,தாடகையைக் குறிப்பிடும்போது 'மை' வண்ணம் என்றும் குறிப்பிடுகிறார். மை என்பது கருமை.அக்கருமை,அறியாமை என்ற ஆணவம் என்று சைவசித்தாந்தம் கூறும். ஆனால் தன்னலமில்லாது கேட்காமலேயே வழங்கக்கூடிய கருமுகில்(மழைமேகம்)வண்ணமாய் ராமன் இருந்ததால் அவனை மழை வண்ணன் என்றார்.கம்பனின் முடிமணியாகத் திகழும் இப்பாடல்வழி கம்பரின் இலக்கியச் சுவையைப் பருகுவதற்கு முன்னர் அதை இலக்கணத்தோடு பொருத்திப் பார்ப்பது மேலும் சுவை கூட்டும்.

வண்ணம் பற்றி தொல்காப்பியர் பொருளியல் நூற்பா 7 இல் விளக்குகிறார்.மேலும் வண்ணத்தை 20 ஆக வகைப்படுத்துகிறார்.

**வண்ணம் பசந்து புலம்புறு காலை**
**உணர்ந்த போல உறுப்பினைக் கிளவி**
**புணர்ந்த வகையான் புணர்க்கவும் பெறுமே**

**தலைவி தன் உடம்பின் நிறம் வேறுபட்டு** வருத்தம் அடையும் காலத்தில் தலைவன் பிரிவைத் தன் உறுப்புக்கள் அறிந்ததுபோல பொருந்தும் வகையால் பாலின் கண் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடு 'வண்ணம்' எனப்படும் என்பது இந்த நூற்பாவின் கருத்து.

வண்ணம்-வர்ணம் என்பது நிறத்தைக் குறிக்கும்.ஆனால் இலக்கண விதிப்படி பெயரெச்சத்தின் பின் 'முறையில்' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் ஓர் இடைச்சொல்.எடுத்துக்காட்டாக 'இந்தக் கட்டுரை முன் மாதிரியாகக் கொள்ளும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது' அவரவர் தங்கள் அனுபவங்களுக்கு ஏற்ற வண்ணம் நடந்து கொள்கிறார்கள். 'அவர் பிறருக்குத் தெரியாத வண்ணம் அந்தச் செயலைச் செய்துவிட்டார்', 'வாழ்த்துத் தந்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன', 'கோடை காலத்தில் தண்ணீர் குடித்த வண்ணம் இருக்கிறோம்' என்பதுபோல பயன்படுத்தப்படும் இறந்தகால பெயரெச்சத்தின் பின் குறிப்பிட்ட செயல் தொடர்ந்து நிகழ்வதை அல்லது நிலையின் மிகுதியைக் காட்டவும் பயன்படுத்தப்படும் ஓர் இடைச்சொல்.ஆனால் இறையருள் பெற்ற அருளாளர்கள்,இறைவனைத் தங்கள் அனுபவத்தால் கண்டதையும் இறைவனின் திருமேனி அழகையும் அவனது பெருமைகளையும் புகழ்ந்துரைக்கும் இடங்களில் எல்லாம் 'வண்ணம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.இறைவனைக் கண்டேன் என்று அவர்கள் கூறினாலும் இறைவன் 'ஒருநாமம் ஒருருவம் இல்லாதவனுக்கு ஆயிரம் திருநாமங்கள் பாடி' என மணிவாசகப்பெருமான் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் ஆன்மாக்கள் மீது வைத்த பெருங்கருணையினால் உருவம் கொள்ளும் போது பல நிறங்களைத் தாங்கி நிற்பவனாயினும் குருமூர்த்தியாக எழுந்தருளியபோது மணிவாசகப் (பெருமானுக்கு) பெருமான் கண்டது அவனது சிறந்த திருமேனி என்பதால் 'செம்பவள வெற்பின் சேகுடையாய்' என்றார்.பவளவெற்பு இயற்கையான செந்நிறம் தவிர தேசாகிய ஒளியில்லை என்பதை விளக்க செம்பவள வெற்பினும் மிக்க ஒளியுடையாய் என்றார்.

அப்பரடிகளும் 'செம்பவளத் திருவுருவர் திகழ் சோதிக் குழைக்காதர்' என்றருளிச் செய்துள்ளார்.

இறையருளால் அன்றி வேறு எந்த விதத்திலும் இறைவனை அறிய இயலாது மாலொரு பாகமும் மாதொரு பாகமும் உடைய அப்பரமன் அருளே வடிவமாகக் கொண்டவன். ஆகவே அவன் திருவருளையே கண்ணாகப் பெற்று அவனை அறிய முடியுமே அல்லாமல் அவன் இப்படி இருப்பான்.இன்ன நிறத்தில் இருப்பான். இந்த வண்ணமாய் இருப்பான் என்று கூறி இவன்தான் இவைதான் இறைவன் என்று சொல் ஓவியமாகவோ எழுத்தோவியமாகவோ எழுதிக்காட்ட இயலாது என்பதையும் இறைவனது சொரூப நிலையை அவனருளின் துணையின்றி எவராலும் அறிய முடியாது என்பதையும் அப்பரடிகள் கீழ்வரும் பாடலின் மூலம் தெள்ளத் தெளிவாக்கியுள்ளார்.

**மைப்பயந்த கண்ணாரும் தானும் கச்சி**
**மயானத்தான் வார்சடையான் என்னில் அல்லால்**
**ஒப்புடையான் அல்லன் ஒருவன் ஓர் ஊரான் அல்லன்**
**ஓர் உவமன் இல்லி**
**அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்**
**அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்**
**இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன்**
**இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒணாதே(6-97-10)**

சேரமான் பெருமான் நாயனார் இயற்றிய பொன்வண்ணத்து அந்தாதி முதல் பாடலிலேயே இறைவனின் வண்ணம் பற்றி இலக்கிய நயத்தோடுபாடி விளங்கியுள்ளார்.

**பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்**
**மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம்**
**தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக் கண்ட**
**என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே(1)**

இவ்வாறு இறைவனின் திருமேனி அழகால் கவரப்பட்டு பாடியவர் இறைவனின் திருமேனியின் ஒவ்வொரு உறுப்பும் எது எதனை ஒத்திருந்தது என்பதையும் 25 ஆம் பாடலில் விளக்கியுள்ளார்.

## இலக்கிய சுவை...

இறைவனின் மேனி அழகில் ஈடுபடும் நிலை அடியவர்கள் உள்ளத்தில் பெண்மையைத் தோற்றுவிக்க அவ்வாறு பெண்மை தழுவி நின்று பாடப்படுபவை அகத்துறைப் பாடல்கள் என்பர். சைவ சமய அருளாளர்கள் மட்டுமல்லாமல் வைணவ அருளாளர்களும் இந்த (இறை) இன்பத்தை அனுபவித்துப்பாடியுள்ளனர்.

**அவ்வாறு அப்பரடிகள் அனுபவித்துப் பாடிய**
**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்(6501)**

என்ற பாடல் அக இலக்கியத்துக்கே மணிமகுடம் சூட்டியதுபோலத் திகழ்கிறது. திருக்கோயிலைப் பாடும்போது இத்திருக்கோயிலில் கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியின் அழகுத் திருக்கோலங்கள் பேயாழ்வாரை மிகவும் கவர்ந்து இழுக்கிறது.

**அடிவண்ணம் தாமரை அன்று உலகம் தாயோன்**
**படிவண்ணம் பாற்கடல்நீர் வண்ணம்-முடிவண்ணம்**
**ஓராழி வெய்யோன் ஒளியும் அஃதன்றே**
**ஆராழி கொண்டாற் அழகு(2286)**

என்ற பாசுரம் இக்கோல் அழகில் ஈடுபாடு உடைய அடியவர்கள் பக்தி பிரேம பக்தியாக மலர்ந்து இறைவனைப் பற்றிய காதல் பாடலாக வெளிவரவும் உதவுகிறது. பொய்கையாழ்வார் திருமழிசை ஆழ்வார்,தொண்டரடிப்பொடி ஆழ்வார்.ஆண்டாள் போன்றோரின் பாசுரகேளே இதனைத் தெளிவுபடுத்தும். இறைவனைப் பற்றிப் பாடிய பாடல்கள் அனைத்துமே பக்திச் சுவை மிகுந்த இலக்கியங்கள் ஆகிவிடுவதில்லை. இறைவன் பெருமையில் தன்னார்வ பிணைப்பு எந்த அளவில் வெளிப்படுத்தப்படுகிறது என்பதுதான் பக்தியில் மிக முக்கியமானது.இவ்வாறு அருளாளர்கள் இறைவனின் வண்ணம் பற்றிந் பாடினாலும் இறையியல்பின் உண்மை பற்றியும் சிறிது அறிந்து கொள்வது நல்லது இறைவனின் சிறப்பியல்புகளாக திருக்களிற்றுப்படியார் எனினும் சைவசித்தாந்த நூல் பின்வருமாறு கூறுகிறது.

**உண்டு என்னில் உண்டாகும் இல்லையெனில்**
**உண்டாகும் ஆனமையின் ஓர் இரண்டாம் உண்டு இல்லை**
**என்னும் இசைதவிர்ந்த இன்பத்தை எய்தும் வகை**
**உன்னில் அவன் உன்னுடனே ஆம்(36)**

உண்டு என்று கூறினால் இல்லாமை உண்டாகும்.இல்லை என்று கூறினாலும் இல்லாமை உண்டாகும். ஆனமையினால் ஓர் இரண்டாம் என்று கூட்டிப்பொருள் கொள்ளவேண்டும். நமது சுட்டறிவினால் கருவி காரணங்களின் துணை கொண்டு அறிந்து கடவுள் உண்டு என்று கூறினால் அவ்வாறு அறியும் அனைத்தும் அழியக் கூடியவை.ஆதலால் கடவுள் இல்பொருளாகி அசத்தாய் (இல்லததாய்)முடியும்.எமது அறிவினால் அறிய முடியாது.போனால் நமது அறிவுக்கு எட்டாத அப் பரம்பொருள் எப்பொழுதும் இல்லை என்றாகிவிடும். ஆக உயிரறிவினால் அறியப்படாத இறைவன் அவனது திருவருளின் வழி நிற்கும் ஆன்மாக்களுக்குப்பேரின்ப அனுபவப் பொருளாகத் தோன்றும் இயல்புடையவன் ஆவான் என்பது விளக்கம்.

இடைவிடாத அன்போடு இறைவனை நினைந்துபோற்றினால் அவன் நம்மோடு பிரிப்பின்றி இரண்டறக் கலந்துநின்று பேரின்பத்தை வழங்குவான். தன்னையும் காட்சிப்படுத்துவான். தன்னையே அடியார்களுக்குத் தந்து நிற்பான்.இதற்குத் தேவை இறைவனிடத்தில் இமைப்பொழுது நீங்காத இடைவிடாத தூய அன்பு மட்டுமே இது நாயன்மார்களிடமும் ஆழ்வார்களிடமும் விரவி இருந்தது. இறைவன் அறியும் பொருளன்று அனுபவப்பொருள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டை' கட்டும் பழக்கம் தோன்றியது எப்படி?



பண்டைய காலத்தில் ரோமாபுரியைச் சேர்ந்த படைவீரர்கள்,கழுத்தைச் சுற்றி ஒரு துணியை அணிந்தனர். குளிர் காலத்தில் குளிருக்கு இதமாகவும் வெயில் காலத்தில் வியர்வையை உறிஞ்சுவதற்கும் அந்தத்துணி பயன்பட்டது. இதைப்பார்த்த மற்ற நாடுகளைச் சேர்ந்த படைவீரர்களும் இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது அவரவர் சார்ந்த கட்சியைக் குறிக்கும் விதத்தில் வெவ்வேறு வண்ணங்களாலான டை களை அணிந்து கொண்டனர். பின்னாளில் இது நாகரிக உடையின் ஒரு அங்கமானது.நாம் அணிந்திருக்கும் உடையை கவர்ச்சிமிக்கதாக மாற்றவும் இந்த 'டை' பயன்படுகிறது.




## சில தகவல்கள்

★ சபர்மதி ஆசிரமம் குஜராத் மாநிலத்தில் உள்ளது.

★ ரஷ்யாவை 'இரும்புத்திரை நாடு' என்று குறிப்பிட்டவர் வின்ஸ்ட்ன் சேர்ச்சில்.

★ முட்டையிடும் பாலூட்டி 'பிளாட்டிபஸ்'.

★ வெட்டுக்கிளி இரத்தத்தின் நிறம் வெள்ளையாக இருக்கும்.

★ இந்திய மண்ணில் படையெடுத்து நுழைந்த முதல் ஐரோப்பிய மன்னர் அலெக்ஸாண்டர்.

★ உலகிலேயே மிகப்பெரிய பல்லி,கொமோடோ டிராகன்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 58

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 |
| 6 | | 7 | | 8 | 9 |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| | 15 | | | 16 | |
| | 17 | 18 | 19 | | 20 |
| 21 | | | 22 | 23 | 24 |

**இடமிருந்து வலம்**

1. பிறப்பு என்றும் சொல்லலாம்
8. தாய், தந்தையரை விட மேலானவர்
10. அகவை (திரும்பியுள்ளது)
13. நீதிமன்றத்தில் வழங்குவது
17. பொறி என்றும் சொல்லலாம்
21. தொற்றுநோய் பரப்பி
22. தாய்க்குப் பிந்தியது என்பர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பிராணி என்றும் கூறலாம்
3. காடு என்றும் சொல்வர் (குழம்பியுள்ளது)
5. இரக்கம்
8. பௌத்த துறவிகளை இப்படியும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
11. பெண்களின் கண்களுக்கு ஒப்பிடப்படும் மீன் (குழம்பியுள்ளது)
17. ஓசை எழுப்பும் (தலைகீழ்)
20. வீடு என்றும் சொல்லலாம்

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 56 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சிலி | 1. சித்திரம் |
| 3. தொடர் | 2. புலி |
| 6. புத்தி | 4. சீடர் |
| 12. மோர் | 8. கதிரை |
| 14. நரகம் | 13. மோதிரம் |
| 19. நாம் | 15. நாணம் |
| 23. கல்யாணம் | 17. நதியா |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.மனோரஞ்சன்,**
**இல. 69, வட்டவிதானை வீதி,**
**கல்முனை-02.**

### பாராட்டுப் பெறுவோர்

01. வி.செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி,
புத்தூர்.

02. கே.கந்தசாமி,
கண்டி இந்துக்கல்லூரி,
பேராதனை.


03. எச்.எம்.சாலிஹ்,
ஹாஜியார் வீதி,
கிண்ணியா-06.

04. திருமதி ரீ.செல்வதுரை,
இல. 11 5/1, சென்.லோரன்ஸ் வீதி,
கொழும்பு-06.

05. கேதீஸ்வரநாதன் லக்ஷயா,
இல. 125, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

## சனிக்கிரகத்தின் நிலா



நம்முடைய பூமிக்கு நிலா இருப்பதைப் போன்றே மற்ற கிரகங்களுக்கும் நிலாக்கள் உள்ளன. அந்த வகையில் சனிக் கிரகத்தைச் சுற்றி மொத்தம் 33 நிலாக்கள் இருக்கின்றன. அதில் ஒன்று தான் 'டைட்டன்'. சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி எப்படி இருந்ததோ, தற்போது அதே நிலையில் தான் டைட்டன் உள்ளது. எனவே, பூமியில் உயிரினங்கள் எப்படித் தோன்றின? என்பதை அறிய, டைட்டனை ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

எனவே தான், விஞ்ஞானிகள் 'காசினி' என்ற ஆய்வுக்கலத்தை டைட்டனுக்கு அனுப்பினர். அதில் இருந்த 'ஹைஜென்ஸ்' என்ற ஆய்வுக்கலம், டைட்டனில் பனிப்பாறைகள், கடற்கரை, கால்வாய்கள் இருப்பதைக் கண்டுபிடித்தது. பூமியைப்போல இன்னொன்று இருப்பது ஆச்சரியமாக உள்ளது. எனவே, டைட்டனை ஆராய்ச்சி செய்வதில் விஞ்ஞானிகள் ஆர்வமாக உள்ளனர். குறிப்பிட்ட சில நிலாக்களுக்கு காற்று மண்டலம் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், மற்ற நிலாக்களைவிட, டைட்டனில் அடர்த்தியான காற்று மண்டலம் உள்ளது. பூமியின் காற்று மண்டலத்தை விட இது அடர்த்தியானதாகும். ஆனால், இங்கே உள்ள காற்று ஒரேஞ்சு நிறத்தில் இருக்கும் என்கிறார்கள், விஞ்ஞானிகள். எனவே, அங்குள்ள காற்றை நம்மால் ஊடுருவிப் பார்க்க முடியாது. இதனால் செயற்கைக் கோள் டைட்டனைப் படம் எடுத்தபோது, தரைப் பகுதியில் என்ன இருக்கிறது எனத் தெளிவாக அறிய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் பறிக்கும் பாடசாலைகள்



உலகில் இலவசக் கல்வியை வழங்கி வருகின்ற ஒரே நாடு இலங்கை. இதனால் ஏழை–பணக்காரர் என்ற பேதமின்றி அனைத்து மாண வர்களும் கல்வியைப் பெறும் வாய்ப்புள்ளது.இருந்தும் பாட சாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பொழுது அனுமதிக்கட்டணம் என்ற பெய ரில் அவர்கள் பெருந்தொகைப் பணத்தை அறவிடுவதாகப் பெற் றோர் மத்தியில் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

கிராமியப் பாடசாலைகள் முதல் பிரபல பாடசாலைகள் வரை தங்கள் வசதிப்படி பணத்தைக் கறக்கின்றன என்றும் தனியார் பாடசாலைகளோ 'இலட்சக் கணக் கில்' அனுமதிக் கட்டணங்களை உயர்த்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இச் செயற் பாடானது ஏழை மாணவர்களின் வயிற்றில் புளியைக் கரைப்பது போன்றுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்திபெற்றுள்ள மற்றும் தரம் 1 மாணவர்களின் அனுமதிகளின் போதே பாடசாலைகளால் இவ் வாறான பெருந்தொகைப் பணம் அறவிடப்படுகின்றது.வாழ்க் கைச் செலவுகள் உயர்வடைந்து கழுத்தை நெரிப்பது ஒரு பக்கம் இருக்க பாடசாலைகளின் அனு மதிக்கட்டண உயர்வு மறுபக்கம் கூடுகின்றது.இதனால் தமது பிள்ளைகள்ளக் கற்பிப்பதில் பெற் றோர்கள் திணறுகின்றனர்.

இவ்வாறு மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியில் பாடசா லையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப் படுவதாகக் கூறப்படுகின்றது. எனினும் இச்செயலானது ஒரு நாகரிக வழிப்பறி போன்றே தென்படுகின்றது.மூலதன மில்லாத இலட்ச ரூபாவைத் திரட்டித் தரக்கூடிய ஒரு தொழில் போன்றும் காணப்படுகின்றது.

இலங்கையின் கல்வி வீதம் உயர்வ டைய வேண்டுமென்றும் பாகுபாடின்றி அனைத்து மாணவர்களும் எழுத்தறி வைப் பெறவேண்டும் என்று கருதி 1945 ஆம் ஆண்டு சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவினால் இலவசக் கல்வித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.தற்போது நோக்குகையில் 'இலஞ்சக் கல்வித்திட் டம்' என்ற ஒன்று உருவாகியிருப்பதாகத் தெரிகின்றது.

மாணவர் அனுமதிகளின் போது மட்டுமன்றி இன்னும் பல தேவைகளுக் காகவும் அவர்களிடமிருந்து கற்கின்ற காலங்கள் வரை பணம் கறப்பதாகவும் பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.பணம்படைத்த வர்த்தகத்தினருக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டாகத் தெரி வதில்லை.ஆனால், நாட்கூலி ஒருவரின் பிள்ளை? அந்தப்பிள்ளை கற்பதற்கு நிதி கொடுப்பார் யார்? இவ்வாறு பெருந் தொகை பணம் ஏழை மாணவர்களிடமி ருந்து அறவிடப்படுவது நியாயமா என்று நீதி கேட்போர் யார்? யாழ்.மண்ணின் ஒரே மூலதனமான மூளைவளத்தையும் சில மூளைசாலிகள் அழிக்கவல்லவா நினைக்கிறார்கள்.

மாணவர்கள் மத்தியில் ஏற்றத்தாழ் வுகள் இருக்கக்கூடாது என்பதற்காக சீருடை வழங்கப்பட்டது. இலவச நூல்கள், இலவச உணவுத்திட்டம் என்பவற்றை அரசு விநியோகிக்கின் றது.இவையும் மாணவர் நலன் கருதிச் செய்யப்படுகின்றன.ஆனால், அனுமதிக் கட்டணம் என்ற போர்வையில் மேற் கொள்ளப்பட்டு வரும் நாகரிக வழிப்பறி தொடர்பாக அரசு என்ன பதில் சொல் லப்போகின்றது?கல்வி அமைச்சு ஏன் மௌனம் சாதிக்கின்றது?

நகர்ப்புறப் பாடசாலைகளில் தாமும் கற்கவேண்டும் எனும் கனவுகளுடன் காத்திருக்கும் மாணவர்களின் எண்ணங் கள் அனுமதிக்கட்டணம் என்ற கூரிய ஈட்டியால் குழிதோண்டிப் புதைக்கப் படுகின்றன.அவர்களின் உள்ளங்கள் புஷ்வாணம் ஆக்கப்படுகின்றன.இதனால் மனரீதியான பாதிப்புகளுக்கும் அவர்கள் ஆளாகின்றனர்.

இத்தகைய ஏழை மாணவர்களுள் எத் தனையோ திறமைசாலிகள் ஒளிந்திருப் பார்கள்.சில நேரங்களில் தக்க சந்தர்ப்பம் கிடைக்காமையால் அவர்கள் மறைந்தும் போகக்கூடும். இதனால் எமது நாடு பாரிய இழப்பைச் சந்திக்க நேரிடும்.இதற்குப் பணம் கறக்கும் பாடசாலைகள் என்ன பதில் சொல்லப் போகின்றன?

இன்று பெரும்பாலான பாடசாலைக ளுக்கு வெளிநாட்டு நிதியுதவிகளும் கிடைத்து வருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. அங்குள்ள பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளால் பாடசாலை அபிவிருத்திக்கும் மாணவர் கல்வி விருத்திக்குமென உதவிகள் அளிக் கப்படுகின்றன.இவ்வாறு வழங்கப்படுகின்ற ... காகிதாதிப் பொருட்களுக்குக் கூட சில பாடசாலைகள் மாணவர்களிடமிருந்து நிதி அறவிடுவதாகவும் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

எமது நாட்டில் குறிப்பாக தமிழர் பிரதே சங்களில் அவர்களின் ஒரே சொத்தாக இருப்பது கல்விதான். அதிலும் போரி னால் பாதிப்புற்ற வன்னி மக்களிடம் எஞ்சியிருக்கின்ற சொத்து அதுதான். இந்நிலையில் வன்னி மாணவர்களிட மிருந்தும் [யாழ்.குடாநாட்டுப் பாடசா லைகள்] நிதியை எதிர்பார்ப்பது அல்லது கறக்க முயற்சிப்பது எந்தவகையில் நியாயம்?

பிரபல பாடசாலையொன்றில் [தனி யார் பாடசாலை] தனது பிள்ளையை தரம் 1 இல் சேர்ப்பதற்காக அனுமதி கோரிச் சென்ற தாயாரின் அனுபவம் இது. எனது பிள்ளையை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் எனும் நோக்கில் பிரபல பாட சாலையொன்றில் சேர்ப்பதற்கு அனுமதி கோரிச் சென்றேன்.அங்கிருந்த லிகிதர் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப்பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கூறினார்.

நானும் விண்ணப்பப்படிவம் தரு மாறு கேட்க ஆயிரம் ரூபா அதற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கூறினார்.நான் சற்றும் எதிர்பார்க்காத தொகை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இம் முறையே அதிக தொகைக்கு விண்ணப்பப்படிவங்களை விற்பனை செய்கிறார்கள்.

தனியார் பாடசாலைகளுடன் ஒப்பி டுகையில் அரச பாடசாலைகளிலும் கிட்டத்தட்ட இதேதொகை தான் அதற்கு அறவிடுகிறார்கள்.இவ்வாறு விண்ணப் பப்படிவத்திற்கும் அனுமதிக்கட்ட ணங்களுக்குமென யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் பேரம் பேசும் நிலையில் உள்ளன.இதனால் எங்களைப் போன்ற ஏழைகளின் பிள்ளை கள் இத்தகைய பாடசாலைகளில் கல்வி கற்க முடியாமல் போகின் றது.ஏழைகளின் பிள்ளைகள் என்றால் என்ன இழப்பம் என்று கருதுகிறார்களா?

உலக வரலாற்றைப் புரட் டிப் பார்க்கையில் ஏழ்மையில் வாடியோரே வியத்தகு சாதனை கள் புரிந்திருப்பது தெரியும். இவ்வாறிருக்க பெருந்தொகைப் பணத்தை அறவிடும் பாடசா லைகளை என்னவென்பது?என் பிள்ளை பெரிய பாடசாலையில் படிக்கவே ஆசைப்படுகின்றான். அதற்குரிய பெருந்தொகைப்ப ணம் எம்மிடம் இல்லையென்பது அந்தப் பிஞ்சு உள்ளத்திற்குத் தெரியுமா? என்று வேதனையுடன் கூறினார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தி எய்திய தனது பிள்ளையை நகர்ப்புறப்பாடசாலை ஒன்றில் [அரச பாடசாலை] சேர்ப்பதற்குச் சென்றிருந்த இன் னொரு அன்னையின் உள்ளத்து வேதனை இது;எனது பிள்ளை சிறிய பாடசாலையொன்றில் படித்துச் சித்தி பெற்றுள்ளான். அவன் மிக மிகக் கெட்டிக்காரன். நகர்ப்புறப் பாடசாலைகளில் படிக் கவே அவன் ஆசைப்படுகின்றான். ஆனால் அங்கு பெருந்தொகைப்ப ணம் கேட்கின்றனர்.

நாங்கள் ஏழைகள்.எதிலும் அளவோடுதானே ஆசைகொள்ள வேண்டும். ஆனால், என் பிள்ளையின் மனம் இதனை உணருமா? வசதியான பாடசாலைகளில் பணக்காரப்பிள்ளைகள் மட்டும் தான் படிக்கலாம் என்ற விதியை உண்டாக்கியது யார்? கிராமியப் பாடசா லைகளில் வளவிருத்தியை ஏன் உண்டு பண்ணவில்லை?

வறிய மக்களை யாருமே கண்ணெ டுத்துப் பார்க்காததைப் போலவே வறிய மாணவர்களையும் அவர்தம் ஆற்றல்களை யும் யாரும் கண்டுகொள்வதாக இல்லை. பெரும்பாலான பாடசாலைகளில் சில பாடசாலைகளுக்கான துறைசார்ந்த ஆசிரி யர்கள் [ஆங்கிலம்,சிங்களம்,உடற்கல்வி] முதலானவை இல்லை.இதனால் 2 ஆம் மொழியைக் கற்றுக்கொள்வதில் பிள்ளை கள் இடர்பாடுகளை எதிர்கொள்கின்ற னர்.அரச பாடத்திட்டத்தில் 2 ஆம் மொழி சேர்க்கப்பட்டிருந்தும் பெரும்பாலான பாட சாலைகளில் அது கற்பிக்கப்படுவதில்லை.

இந்நிலையில் ஏழை மாணவர்களி டம் பெருந்தொகைப்பணத்தைக் கறக்க முயற்சிக்காது அவர்களைத் தமது பாட சாலைகளில் இணைப்பதற்கு அதிபர்கள் தயாரா?என்று கேள்வி எழுப்பினார்.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர் அனுமதிகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்ற இவ்வேளையில் ஏழை மாணவர்கள் என்ன செய்வது? அவர்களின் இயல்பறிந்து திறனறிந்து அவர்களை உள்வாங்கப் பாடசாலை கள் தயாரா? இல்லை நாகரிக வழிப்பறி தொடருமா?புத்திஜீவிகள் புரிந்துகொண் டால் வெளிச்சம்.

எஸ்.ரூபனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஹ்மான் மீது தங்கர்பச்சான்



அஞ்சலி

தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் யாரெல்லாம் எதற்கெல்லாம் ஆத்திரப்படுவார்களோ தெரியாது. ஒரு மாபெரும் இளைஞர் பட்டாளத்தை திரட்டப்போகிறேன் என்று களத்தில் இறங்கியிருக்கிறார் தங்கர்பச்சான். நல்ல விடயம் செய்யட்டும். ஆனால் அவர் கூறியிருக்கும் சில கருத்துகள் ரஹ்மான் ரசிகர்கள் மனசில கொள்ளிக் கட்டையை வைத்து தேய்க்காத குறை. மக்கள் பிரச்சினைக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நினைக்கிறார்கள் திரையுலகத்தினர். விருது வாங்குவது தான் பெரிய அங்கீகாரமா? அந்த விருதை வைத்துக் கொண்டு நாக்கு வழிக்க போகிறீர்களா? ஒஸ்கார் விருது கொடுக்கும் போது ஈழத்தமிழர் வதைபடும் போது இதை நான் வாங்க மாட்டேன் என்று சொல்லியிருந்தால் தமிழ



## ஒரு முத்தத்திற்கு ஒரு லட்சம்

'மகிழ்ச்சி' என்ற படத்தில் நாயகியாக நடிக்கும் அஞ்சலிக்கு அப்படத்தில் வரும் முத்தக்காட்சி ஒன்றுக்காக ஒரு முத்தத்திற்கு ஒரு லட்சம் ரூபா வீதம் இயக்குநரும் நடிகருமான கௌதமன் கொடுத்துள்ளார். இதற்கு முன் இப்படி நடிச்சதில்லை. இந்தப் படத்தில் குளிக்கிற காட்சி இருந்திச்சு. அது கதைக்குத் தேவைப்பட்டதால் நடிச்சேன் என்றார் அஞ்சலி. குளிச்சாங்க, விழுந்தாங்க, புரண்டாங்க என்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. இந்த ஜோடி ஒரு படி மேலே போய் உதடோடு உதடு பேசி முத்தம் கொடுத்திருக்கிறார்களாம். முதலில் முரண்டு பிடித்த அஞ்சலியை எப்படி எப்படியோ பேசி வசமாக்கினாராம் கௌதமன். ஆனால் ஆர்மோனியத்தில் ஆறு கட்டையை மட்டும் உருவினாற் போல உம்மென்று இருந்த அஞ்சலி ஒரு விடயத்தை சொன்ன பிறகு ஜம் என்று ஆனாராம். அதென்ன பொல்லாத விடயம்? ஒரு உதட்டு முத்தத்துக்கு ஒரு இலட்சம் சம்பளம் என்றாராம் கௌதமன். எண்ணிக்கோ...எத்தனை வேணும்? என்று உதட்டை சுழித்துக் கொண்டு இறங்கினாராம் அஞ்சலி.



சிறுத்தை – கார்த்தி, தமன்னா, சந்தானம்

# புது பலம் கா

தமிழ் சினிமாவில் மேலும் ஒரு புதுமுகம் அறிமுகம். பெயர் சிவன். 'கோட்டி' என்ற படத்தை இயக்கி அதில் நாயகனாகவும் நடித்திருக்கிறார். இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் பாடல்கள் இரண்டையும் திரையிட்டார்கள். காது மடலில் புகுந்த ஸ்பெஷல் சவுண்ட் மண்டைக்குள்ளே போய் மாஞ்சா தடவாத குறை. சவுண்டிலேயே

அருவா வீசி
கள். படமும்
கேற்றாற் பே
அதிரடி. இந்
படத்தை இ
தோடல்லா
நானே நாய
நடிச்சிருக்
விறுவிறுப்
அதிரடியும்
ரப்பான மு
நிச்சயம் பே
இப்போ பே
றதை விட இ
படத்தின் டெ
விழாவில் பே
தமா இருக்கு
உடம்பெல்
டன் சண்டை
உடைத்தது
மற்றப் பட
மாதிரி பைப

'நயன்' நடிகை, ஆர்யா நடிகருடன் ஒரு ரகசிய உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார். அதன்படி ஆர்யா நடிகர் கதாநாயகனாக நடிக்கும் படங்களில் மட்டும் அவருடன் 'நயன்' ஜோடி போடுவாராம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ன் பாய்ச்சல்



னின் பிரச்சினை உலக மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கும் என்கிறார் தங்கர்பச் சான்.

## பாலாவும் சசிகுமாரும்





தாவரத்துக்கு எரு முக்கியம், நல்ல கலைஞர்களுக்கு குரு முக்கியம்! இந்த ஒற்றை வசனத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொள்பவர்களுக்கு வெற்றி நிச்சயம். சமீபத்தில் இதை கண்ணெதிரே உணர்த்திக் காட்டினார் இயக்குநர் பாலா. இயக்குநர்கள் சங்கம் நடத்திய விழாவில் பாலாவுக்கு தங்கத்தில் செய்யப்பட்ட உறுப்பினர் அட்டை வழங்கினார்கள். இந்த அட்டையை அவருக்கு வழங்க பொருத்தமான சாதனையாளர்களை அழைக்க வேண்டுமே? சூப்பர் ஸ்டார் ரஜினியும் இயக்குநர் சிகரம் பாலச்சந்தரும் அழைக்கப்பட்டார்கள். ஆனால் பாலாவின் எண்ணம் வேறாக இருந்தது. 'தப்பா எடுத்துக்காதீங்க இதை என் குருநாதர் பாலுமகேந்திரா கையால் பெற்றுக்கொள்ள வேண்டுமனு விரும்புகிறேன்' என்றார். பின்பு பாலுமகேந்திரா மேடையேறி பாலாவுக்கு அதை வழங்கினார். அது அப்படி என்றால் இன்னொன்று இப்படி. சமீபத்தில் பசங்க படத்திற்காக தேசிய விருது வாங்கிய தயாரிப்பாளரும் இயக்குநருமான சசிகுமார் அந்த தகவலை தனது குருநாதன் அமீரிடம் கூட சொல்லவில்லையாம். பத்திரிகை படித்துத்தான் தெரிந்துகொண்டேன் என்றார் அமீர்.

Saturday



னம

## மணிரத்னம் படத்தில் விக்ரம்



குட்டி ஆட்டின் குருமாவை கண்ணெதிரே பார்த்த பின்பும் தாய் ஆடு தழை திங்க ஒத்துகிச்சாம். அந்த மாதிரித்தான் இருக்கிறது இதுவும். ராவணன் படத்தில் நடித்த வகையில் விக்ரமுக்கு ஐம்பது இலட்சம் பாக்கி என்பதும் அதைத் கேட்டபோது வேறு சில பில்களைக் காட்டி அவரைக் கவலை கொள்ள வைத்தார்கள் என்பதும் முன்பே வெளிவந்த தகவல்கள். இந்த நிலையில் மணிரத்தினம் இயக்கப் போகும் அடுத்த படத்திலும் நாயகனாக நடிக்கப் போகிறாராம் விக்ரம். இவருடன் சூர்யாவும் தெலுங்கு நாயகன் மகேஷ்பாபுவும் இணைந்து நடிக்கப்போகிறார்கள் என்பதுதான் பரபரப்பு. விக்ரம், சூர்யா இருவரும் சம்மதித்துவிட்டாலும் மகேஷ்பாபு கால்ஷீட்டுக்கு மட்டும் கால்கடுக்க காத்திருந்தால் தான் ஆகும் போலிருக்கிறது. எனவே அவருக்கு இணையான தெலுங்கு நாயகனை அணுகிக் கொண்டிருக்கிறார்களாம். வழக்கமாக ராமாயணம், மகா பாரதங்களை உல்டா அடிக்கும் மணிரத்னம் இந்த முறை தேர்வு செய்திருப்பது கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலைத்தானாம். இதைப்படமாக்க கமல் உள்ளிட்ட பலரும் விரும்பினார்கள். ஆனால் முயற்சி அளவிலேயே கைவிடப்பட்டது திட்டம். மணிரத்னம் நவீன காலத்திற்கேற்ப வடிவமைத்துக் கொண்டிருக்கிறாராம். இவருக்கு உதவிக் கொண்டிருப்பது பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் என்பது கூடுதல் தகவல்.

## காட்டும் புதுமுகம்



ா வீசினார் ... படமும் அதற் ... றாற் போல ... டி. இந்தப் ... தை இயக்கிய ... ல்லாமல் ... ா நாயகனாக ... சிருக்கேன். ... சிறுப்பான ... டியும் பரப ... ன முடிவும் ... ம் பேசப்படும். ... பா பேசு ... விட இந்தப் ... தின் வெற்றி ... வில் பேசுறதுதான் பொருத் ... இருக்கும் என்றார். சிவன் ... பெல்லாம் பரவுகிற சக்தியு ... சண்டைக்காட்சிகளில் இவர் ... த்தது நிஜ கண்ணாடிதானாம். ... ப் படங்களில் பயன்படுத்துற ... பைபர் இல்ல என்றார்கள் அங்கு வந்திருந்த தொழிலாளிகள்.

இது என்னோட மூணாவது படம். இதுலதான் நாகரிக உடை போட்டுட்டு நடிச்சிருக்கேன். பொதுவாக எனக்கு நாகரீக உடைதான் புடிக்கும். அதனாலேயே இந்தப் படம் ரொம்ப விருப்பமா இருந்தது என்றார் நாயகி பாக்கியாஞ்சலி.

## இன்னொரு பெண் இயக்குநர்

தமிழ்ப் பட உலகில் அபூர்வமாகவே பெண் இயக்குநர்கள் வருகின்றனர். இதுவரை எத்தனை பெண் இயக்குநர்கள் தமிழ்த் திரையுலகிற்கு வந்துள்ளனர் என விரல் விட்டு எண்ணிவிடலாம். பழைய பெண் இயக்குநர்களைத் தள்ளிவிட்டு பார்த்தால் சுஹாசினி, வல்லமை தாராயோ படம் இயக்கிய மதுமிதா, திருதிரு துறுதுறு படத்தை இயக்கிய நந்தினி மூவர் தான் தென்படுகின்றனர். இந்த வரிசையில் இன்னும் ஒருவர் வந்து இணைந்திருக்கிறார். ஜெயலட்சுமி நடராஜன் தயாரிக்கும் மதுவும் மைதிலியும் படத்தை இயக்கும் ஜெயந்தி தான் அந்தப் புதுவரவு. இப்படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார்.

மன்மதன் அம்பு – கமல்





ஸ்ரேயா தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழி படங்களிலும் மாறி மாறி நடித்து வருகிறார். இவர் உடற்கட்டை ஒரே சீராக வைத்திருப்பதைப் பார்த்து தமிழ், தெலுங்கு கதாநாயகர்களை விட இந்தி கதாநாயகர்கள் பரவசப்படுகிறார்களாம். எல்லாமே யோகாவின் மகிமை என்கிறார் ஸ்ரேயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்களால் நிரம்பி வழியும் 'பேஸ்புக்'




'பேஸ்புக்' - *Facebook* மற்றும் 'ட்விட்டர்' *Twitter* போன்ற சமூக வலைத்தளங்களில் உலா வருபவர்கள் பெரும்பாலும் பொய்களையே கூறிவருவதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

இப்போதெல்லாம் சாமான்யர்கள் மட்டுமல்லாது அரசியல், சினிமா, விளையாட்டு, எழுத்து என பலதரப்பட்ட துறைகளைச் சார்ந்தவர்களும் தங்களுக்கென்று பேஸ்புக்கிலோ அல்லது ட்விட்டரிலோ ஒரு வலைப்பக்கத்தை உருவாக்கிக் கொண்டு அதில் தங்களது சொந்தக்கதை,சோகக் கதைகளை எடுத்துவிடுவது நாகரீகமாகிவிட்டது.

சாமான்யர்கள் தங்களுக்கு நாட்டமுள்ள இலக்கியமோ அல்லது விளையாட்டோ அல்லது சமூக சேவையோ போன்ற துறைகளை குறிப்பிட்டு அதே துறைகளில் நாட்டமுள்ளவர்களுடன் குழுவாக இயங்கி அது தொடர்பான செய்திகளை தங்களது சமூக வலைத் தளங்களில் எழுதி வருகின்றனர்.

அதேபோன்று பிரபலங்களும் பெரும்பாலும் சினிமா நட்சத்திரங்கள் அல்லது விளையாட்டு வீரர்கள்-தங்களது குழந்தை 'உச்சா' போனதிலிருந்து நேற்று எந்தக் கடையில் பிட்ஸா சாப்பிட்டேன் என்பது வரை அடித்து விடுகிறார்கள்.அதையும் ஒரு கூட்டம் ஆவலாக படிக்க காத்துக்கொண்டிருக்கிறது.

இவர்கள் கதை இதுவென்றால் அத்வானி போன்ற தலைவர்கள், . அயோத்தி,காஷ்மீர் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீதான தங்களது கருத்துகளை இப்போதெல்லாம் பத்திரிகையாளர்களிடம் கூறுவதைக் காட்டிலும் தங்களது வலைத்தளங்களில்தான் எழுதுகிறார்கள்.

அதேசமயம் எசகுபிசகாக எதையாவது எழுதி சர்ச்சையில் சிக்கிக்கொள்கின்ற அரசியல் பிரபலங்களும் உண்டு.இந்தியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சராகவிருந்த சசிதரூரை நினைவிருக்கிறதுதானே..?!விமானத்தில் 'எக்கனாமிக்' வகுப்பில் பயணிப்பது மாட்டுத் தொழுவத்தில் இருப்பது போன்று இருப்பதாக தனது ட்விட்டர் தளத்தில் எழுதப்போக வசமாக வாங்கிக்கட்டிக்கொண்டார்.

இந்தியாவில் மட்டும் இந்த நிலை இல்லை.பல மேற்குலக நாடுகளிலும் இதே கதைதான்!



ஆனால் இதுபோன்ற சமூக வலைத் தளங்களில் 'கதைப்பவர்கள்' நேரில் பேசும்போது கூறுவதைக்காட்டிலும் பொய்களைத்தான் அதிகமாக அவிழ்த்து விடுவதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பிரிட்டனில் 'டைரக்ட் லைன் இன்சூரன்ஸ்' என்ற நிறுவனம் சுமார் 2000 பேரிடம் நடத்திய ஆய்வில் ஒருவர் மற்ற யாரோ ஒரு நபரிடம் நேருக்கு நேர் பேசும்போது பொய் கூறுவதை விட ட்விட்டரிலோ அல்லது பேஸ்புக்கிலோ பொய்களை எழுதும்போதுதான் அதிக சௌகரியமாக உணர்வதாக தெரிய வந்துள்ளது.இந்த ஆய்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தவர்களில் 20 வீதத்தினர் மட்டுமே ட்விட்டர் அல்லது பேஸ்புக் அல்லது பிறைடப் செய்யப்பட்டு அனுப்பும் முறை வழியாக பேசும்போது மிகவும் நேர்மையுடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.




நவீன போன்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் உடனடி செய்தி அனுப்பும் இமெயில்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மக்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்வதற்கான தடைகளை நீக்கி மிகவும் வெளிப்படையாக பேசுவதை அனுமதிக்கும் புதுமையான வழிமுறைகள் என்று புகழப்படுகிறது.

'ஆனாலும் சில நேரங்களில் சிலருடன் நேருக்கு நேராக பேசுவதை நாம் தவிர்க்க விரும்புகையில் மேற்கூறிய ட்விட்டர், [illegible] தொலைபேசி வழியான எஸ்.எம்.எஸ். போன்றவை நமக்கு கைகொடுக்கத்தான் செய்கின்றன.

குறிப்பாக நாம் தெரிவிக்கும் செய்தி அல்லது உரையாடல் உண்மை அல்லாததாக இருக்கும்போது அதனை எளிதில் தெரிவிக்க முடிகிறது.சாதாரணமாக இத்தகைய உரையாடலின்போது ஏற்படுகின்ற படபடப்பு,பதற்றம் போன்றவை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்போவதில்லை.

ஒருவேளை நாம் தெரிவிக்கும் தகவல் அல்லது உரையாடல் உண்மையாகவே இருந்து அதனைக் கேட்கும் எதிராளி, வெளிப்படுத்தும் உணர்வுகளை நாம் எதிர்கொள்ளவோ அல்லது அதனைப் பார்த்து நமக்கு ஏற்படும் அங்க அசைவுகளை கட்டுப்படுத்தவோ தேவையில்லை' என்கிறார் பிரபல மனோதத்துவ நிபுணர் வில்சன்!

எனவே அடுத்த முறை ட்விட்டரிலோ அல்லது பேஸ்புக்கிலோ உங்களுக்கு விருப்பமானவர்கள் எழுதுவதை அப்படியே அப்பாவி கோவிந்தாவாக நம்பி விடாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# டில்மா ரௌசெவ்

பிரேஸிலின் முதலாவது பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்தான் டில்மா ரௌசெவ்.

தனி ஒரு நபருக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோமென மகாகவி பாரதியார் கூறி பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்று உலகிலுள்ள பல்வேறு நாடுகள் வறுமையின் பிடிக்குள் சிக்குண்டுதான் உள்ளன.

இவ்வாறாக வறுமையின் பிடியில் சிக்கியுள்ள நாடுகளில் பிரேஸிலும் ஒன்று.ஓரளவில் பொருளாதார அபிவிருத்தியில் பிரேஸில் முன்னணியில் இருந்தாலும் வறுமையினால் சிக்கித் தவிப்போரின் எண்ணிக்கை அங்கு அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வறுமை நிலையை போக்குவதற்கு பிரேஸிலில் கடந்தகாலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த அரசாங்கங்கள் முயற்சி எடுக்கத் தவறவில்லை.

இருந்தாலும் வறுமையின் தாண்டவம் அங்கு தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

இந்நிலையில் மக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிப்பதுடன் வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக உறுதி அளித்துக் கொண்ட ரௌசெவ் பிரேஸிலின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பிரேஸிலின் முதலாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையும் நீண்ட அரசியல் பின்னணியைக் கொண்ட 62 வயதுடைய ரௌசெவ்விற்கு கிடைத்துள்ளது.

அதிக செல்வாக்குடன் இரு பதவிக்காலங்களைப் பூர்த்தி செய்து பதவி விலகவுள்ள ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வாவின் பூரண ஆதரவைப் பெற்ற ரௌசெவ்வின் தேர்தல் வெற்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது.

பல்கேரிய குடியேற்றவாசியினதும் பாடசாலை ஆசிரியை ஒருவரதும் மகளான ரௌசெவ் 1947 டிசம்பர் 14 ஆம் திகதி பிறந்தார்.தந்தை பெட்ரோ ரௌசெவ்,சட்டத்தரணி தாய் டில்மா ஜனே டா சில்வா பாடசாலை ஆசிரியை.

இசபெல்லா ஹென்ட்ரிக்ஸ் ஆரம்பப் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்த ரௌசெவ் பின்னர் நொஸ்ஸா சென்ஹொரா டி சொய்ன் கல்லூரியிலும் மத்திய உயர் நிலைக் கல்வியை முறையே சியோன் கல்லூரி மத்திய உயர் பாடசாலையிலும் பயின்றுள்ளார்.பின்னர் பொருளியல் துறையில் மினாஸ் கெரைஸ் பல்கலைக்கழகத்திலும் ரியோ கிரான்டே டோசுல் பல்கலைக்கழகத்திலும் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

1967 இல் தொழிலாளர் அரசியல் கட்சியில் இணைந்துகொண்ட ரௌசெவ் கொலினா போராளிகளுடன் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டிருந்த நிலையில் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக போராடியிருந்தார். இதற்காக ரௌசெவ் 1970 முதல் 1972 வரை சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான பின்னர் கார்லஸ் என்பவரை திருமணம் செய்து அவருடன் 30 வருடங்கள் குடும்பம் நடத்தினார். அதற்கு முன்னர் 1968 இல் கிளௌடியோ கலேனோ என்பவரை திருமணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திறைசேரிச் செயலாளராகத் தனது பணியை ஆரம்பித்த ரௌசெவ் 2003 ஜனவரி முதல் 2005 ஜூன் வரை சுரங்க மற்றும் சக்தி அமைச்சராகப் பதவிவகித்து 2005 முதல் 2010 மார்ச் வரை சிரேஷ்ட அதிகாரியாகப் பதவிவகித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த அக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ரௌசெவ் எதிர்வரும் 2011 ஜனவரி முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை,ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற நிலையிலேயே இவர் உலக அதிகாரம் மிக்கவர் பட்டியலில் 16 ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

நீண்ட காலமாக பிரேஸிலை வறுமை தாக்கி வரும் நிலையில் ரௌசெவ் வறுமையை ஒழிக்க எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பாரென்பதை பொறுத்திருந்து அறிவோம்.

**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## சிரிக்க... சிந்திக்க...!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்போன் உதவியால் வறுமை குறைகிறதாம்



உலக நாடுக ளில் செல்போன் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 500 கோடியே எட்டிவி டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அதாவது விரைவில் ஒவ்வொரு பேரிட மும் ஒரு செல்போன் இருக்கும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தற்போது அடைந்துவரும் நாடுகளில் 100 பேருக்கு 58 பேரிடம் செல்போன் உள்ளது. ஏழை நாடுகளில் 100 பேரில் 25 பேரிடம் செல் போன் இருக்கிறது.

செல்போன் உபயோகத்தால் உலக நாடுகளில் வறுமை குறைந்துவருகிறது என்று ஐ.நா.சபை ஆய்வு ஒன்று தெரிவிக் கிறது. செல்போன் வைத்து இருப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை செல்போன் மூலமே எளிதாகப் பெற்று விடு கின்றனர்.

இதனால் அவர்கள் குறிப்பிட்ட இடத்துக் குப் பணம் செலவு செய்து செல்லத் தேவை யில்லை. வீண் அலைச்சல் குறைகிறது.

இதுபோன்ற காரணங்களால் மக்களுக் குப் பல வழிகளில் செலவுகள் குறைகின் றன. எனவே வறுமை நிலையும் குறைகி றது என்று ஐ.நா.அறிக்கை கூறுகிறது.

செல்போன் மூலம் ஏராளமான மக்க ளுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருப் பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

## கம்பியூட்டரை விட தேனீயின் மூளை மிஞ்சியுள்ளது

சிக்கலான கணி தத்திற்கு கம்பியூட்டரை விட தேனீக்கள் தீர்வளித்து[ள்ளதாக] பிரிட்டன் விஞ்ஞானிகள் தெ[ரிவித்]துள்ளனர்.




பிரிட்டனைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் தேனீக்கள் போக்குவரத்து குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அதில் விற்பனை பிரதிநிதியின் சிக்கலான போக்குவரத்து வழிக்கு கம் பியூட்டரை விட தேனீக்கள் எளிதாக தீர்வளித்துள்ளன என்று தெரிவித் துள்ளனர். பல்வேறு இடங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள் செல்வதற் கான வழிகள் குறித்து கம்பியூட்டர் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் அதிக இடங்களுக்கு குறுகிய நேரத்[தி]ல் எளிதாகச் சென்று சேர்[வ]தற்கான குறுக்கு வழி க[ளை] கம்பியூட்டர் உருவாக்கித் [தந்]தது.ஆனால், பிரிட்[டன்] விஞ்ஞானிகள் நடத்திய தேனீக்கள் குறித்த ஆய்வில் கம்பியூட்டர் உரு வாக்கிய வழிகளை விட அதிக வழிகளை தேனீக்கள் பயன்படுத் தியது தெரியவந் தது.தேனீக்கள் நாள்தோறும் தேனை சேக ரிப்பதற்காக பூக்களைத் தேடி அதிக தூரம் பயணம் செய்கின் றது.பறப்ப தற்காக அதிக சக்தியை செலவழிக் கும் தேனி குறுகிய நேரத்தில் அதிக பூக்களுக்குச் செல்கிறது.இதற் காக குறுக்கு வழி களை அதிகமாக பயன்படுத்துவது தெரிய வந் தது.இது குறித்து பிரிட்டனைச் சேர்ந்த ராயல் ஹாலோவே பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண டனர்.

அந்த ஆய்வறிக்கையில் அவர்கள் கூறியுள்ளதாவது;

தேனைத் தேடி தேனீக்கள் அதிக பயணம் மேற்கொள்கின்றன.ஆனால் அவை அதிக குறுக்கு வழிகளை பயன்படுத்துகின்றன.இதற்காக கம் பியூட்டரின் உதவியுடன் செயற்கை பூக்களை கொண்டு தேனீக்களின் பயண வழியை கண்காணித்தோம். அதில் தேனீக்கள் மிகக் குறைவான நேரத்தில் வெவ்வேறு பூக்களுக்குச் செல்வதற்கு அதிக குறுக்கு வழி களை பயன்படுத்துவதை கண்ட றிந்தோம்.அந்த வழிகள் விற்பனை பிரதிநிதி செல்வதற்காக கம்பியூட்டர் உருவாக்கிக் கொடுத்த வழிகளை விட அதிக வழிகளாகும்.இதன் மூலம் கம்பியூட்டரின் அறிவை மிகச் சிறிய தேனீயின் மூளை மிஞ்சியுள்ளது.இவ் வாறு விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்




## தேர்மா மீற்றர் உருவான விதம்

கலிலியோவும் சாங்டோரியல் என்ற விஞ்ஞானி யும் தனித்தனியாக தேர்மா மீற்றரைக் கண்டுபிடித்தனர். 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அவர்கள இதைக் கண்டுபிடித்துச் சாதித்தனர்.

ஒரு குழாயின் முனையில் பல்பு போன்ற ஒரு குமிழ் இருக்கும். அதன் வழியாகத் திரவம் ஓடும். அந்த பல்பை உஷ்ணப்படுத்தினாலோ, குளிர்வித்தாலோ குழாயில் உள்ள திரவத்தின் அளவில் மாற்றம் ஏற்படும். அந்த மாற்றத்தை அளக்க அங்குள்ள ஸ்கேலில் எண்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

நூறு ஆண்டுகளுக்குப் பிறகு 1714 இல் டேன்சிக் கைச் சேர்ந்த 'பாரன்ஹீட்' என்பவர் வெப்பத்தை அளக்க தேர்மா மீற்றருக்குள் பாதரசத்தைப் பயன்படுத்தி னார். அதன்பின் 15 வருடங்கள் கழித்து, குளிர்சியை அளக்க அல்க ஹோலை ரூமர் என்பவர் பயன்படுத்தினார். காரணம் 'மைனஸ்' 39 டிகிரியில் பாதரசம் உறைந்து போனதால் குளிர்ச்சியை அளக்க அதைப் பயன்படுத்த முடி யவில்லை.

1742 இல் 'செல்சியஸ்' என்பவர் செ ண்டிகிரேட் தேர்மா மீற்றரை உருவாக்கி னார். அது ஆரம்பத்தில் சோதனைக் கூட ஆராய்ச்சிக்கே பயன்பட்டது. 100 டிகிரி அளவைக் கொண்டு பகுக்கப்பட்ட அதில் உறையும் அளவையும் கொதி நிலை அளவையும் எளிதில் குறிப்பிட முடிந்தது. இந்த இரண்டு நிலைகளுக்கு இடையே உள்ள 100 டிகிரியை எளிதா கப் பகுக்க முடிந்தது.



## பாம்புக்கு காது கேட்கும் தன்மை உண்டா?

பாம்பைப் பற்றி நாம் பெருமையாகக் கூறும் விடயங்களில் ஒன்று 'பாம்புக் காது' என்பது. நன்றாகக் காது கேட்பவரை 'பாம்புச் செவி' உள்ளவர் என்கிறோம். ஆனால், பாம்புக்குக் கேட்கும் தன் மையே கிடையாது என்பதுதான் உண்மை. அது ஒரு காது கேளா உயிரினம்.

பாம்பைப் போன்ற ஊர்வன வகையைச் சேர்ந்த எந்த ஓர் உயிரினத்துக்கும் மனிதனைப் போன்றோ, பாலூட்டிகளைப் போன்றோ 'புறக்காது' கிடையாது. ஆனால், 'மாண்டிபுலார் வழி' என்ற காது துளை உண்டு. இத்துழை மூலம் அவற்றால் ஓசை களை நன்கு கேட்டு அறிய முடியும்.

ஆனால், பாம்புக ளுக்கு இந்த 'மாண்டி புலார்' செவியும் கிடையாது. காது சம்பந்தப் பட்ட புறச் செவி, செவித் துறை, செவிப்பறை எது வும் இல்லாத உயிரினம் பாம்பு. பாம்பின் செவித் திறனைப் பற்றி பழங்காலத்து நூல்கள் கூட வர் ணித்து எழுதியுள்ளன. விலங்கியல் நிபுணர்களின் கருத்துப்படி, பாம்பின கபால எலும்புகளில் ஒன்றான 'குவாட்ரேட்' என்பதும் 'காது மல்லா' என்ற குருத் துப் பகுதியும் ஒட்டி இணைந்து காணப்படும். இந்த அமைப்பு வேறு ஊர்வனவற்றில் கிடையாது.

இந்த அமைப்பு இருப்பதால் மிகவும் தொலைவில் ஏற்படும் அதிர்வலைகளைக் கூட அறிந்துகொள்ளும் திறனைப் பாம்பு பெற்று விளங்குகிறது. இந்த அதிசயப் புலன் அமைப்பைத்தான் பாம்பின் கூர்மையான செவி அமைப்பு என்று நாம் தவறாகப் புரிந் துகொண்டிருக்கிறோம். எப்படியோ, காதுகளே இல்லாமல் செவித்திறன் மிக்க உயிரினம் என்று பாம்பின் புகழ் பாரெங்கும் பரவியது மட்டும் மறுக்க முடியாத உண்மை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# நான் பார்த்த பெண்

கமலா கந்தசாமி

என்னம்மா ?பெண் வீட்ல இருந்து தகவல் எதுவும் வந்ததா?

அலுவலகத்தில் இருந்து திரும்பியதும் ஆவலுடன் கேட்டான் விஜயன்.

'இல்லேப்பா தரகரும் வரல்லே...ஒரு வாரத்துல சொல்றதா சொன்னாங்க...பத்து நாளாயிட்டுது..பதிலே இல்லை...'

அம்மா பார்வதியின் பதிலில் ஏமாற்றமானான் விஜயன்.

திருமணம் என்று பேச ஆரம்பித்த இந்த நான்கு வருடங்களில் கிட்டத் தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களை பார்த்துவிட்டான் விஜயன்.ஆனால் எந்தப் பெண்ணுமே அவனைக் கவரவில்லை.இந்த இடம்தான் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது..ஆனால் தாமதத்துக்குப் பின்னணியில் ஏதாவது காரணம் இருக்கிறதா...?

மனக்கண்ணில் அன்று பெண் பார்த்து விட்டு வந்த வளர்மதி முகமே வந்து வந்து போனது.

சிவப்பும் இல்லாத கறுப்பும் இல்லாத மாநிறம்...அழகான உடல் அமைப்பு.

படிப்பு எம்.ஏ.

ஒரு தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளர்.

விரைவில் அரசுப்பணி கிடைக்க வாய்ப்பு.

விஜயன் மனதில் வைத்திருந்த கற்பனை மனைவியின் முழு உருவமாய் வளர்மதி.

பார்த்த உடனே பிடித்துப் போய் விட்டது.

வஇத்தனை வருடம் காத்திருந்தது வீண் போகவில்லை.நான் தேடிய தேவதை கிடைத்துவிட்டாள்'

மகிழ்ச்சியில் 'எனக்கு பூரண சம்மதம்' பெண் பார்க்க போன இடத்திலேயே விஜயன் சொல்லிவிட்டான்.

மேற்கொண்டு திருமண திகதி உள்ளிட்ட விஷயங்கள் பேசலாம் என அவன் தயாரான போதுதான் பெண் வீட்டில் 'ஒரு வாரம் கழித்து இது விஷயமாய் நாங்கள் தகவல் தருகிறோம்' என்று சொல்லி அவன் மகிழ்ச்சிக்கு தற்காலிக தடை போட்டார்கள்.

வளர்மதியோ பெண்வீட்டாரோ தன்னை நிராகரிக்க மாட்டார்கள் என்கிற தன்னம்பிக்கை அவன் மனதில்.

இருபத்து எட்டு வயதிற்குள்... கணினித்துறையில் மாதம் ஒரு லட்சம் ஊதியம்.

சொந்தமாய் வீடு...இன்னோவா ஏஸி கார்.

வீட்டுக்கு ஒரே பிள்ளை.

அதனால் நிச்சயம் பெண் வீட்டில் இருந்து சம்மதம் கிடைக்கும் என்றே நம்பினான்.

ஆனால் அவன் நினைப்பில் இடி விழுந்தது. அடுத்த நாள் தரகர் தெரிவித்த தகவலால்.

'எதனால வேண்டாம்னு அவங்க சொன்னாங்க தரகரய்யா?' காரணம் அறியும் ஆர்வத்தில் கேட்டான்.

'அதை விடுங்க தம்பி, அவங்களுக்கு கொடுத்து வைக்கலே. உண்மையில் பார்த்தா உங்க வசதிக்கு அந்த இடம் தகுதியில்லே..நாமதான் வேண்டாம்னு சொல்லியிருக்கணும்'



தரகரின் பதிலில் தனது கேள்விக்கான பதில் இல்லாதது ஏமாற்றமாய் இருந்தது.

'எதனால்?நமக்கு என்ன குறை?நம்மை ஏன் பிடிக்காமல் போயிற்று'

இந்த நான்கு வருடத்தில் ஏறத்தாழ நூறு இடத்துல பெண் பார்த்திருக்கிறான் விஜயன்.

ஏதாவது ஒரு காரணம் சொல்லி அவர்களை எல்லாம் நிராகரித்தான்.

ஒரு கட்டத்தில் அம்மாவே மகனை சலிப்பாய் பார்த்தபோது,

அம்மா எனக்குன்னு ஒரு கனவு இருக்கு..அதுல ஒரு தேவதை இருக்கா

பார்த்த பெண்ணை நிராகரிக்கும் போதெல்லாம் விஜயன் சொல்லும் பதில் இது.

இப்போது முதன்முதலாக ஒரு பெண்ணால் அவன் நிராகரிக்கப்பட்டு இருக்கிறான்.

ஏன் எதனால் இந்த நிராகரிப்பு?காரணம் தெரிய வேண்டும்.வளர்மதியிடமே கேட்டு விட்டால் போகிறது!

மறுநாள்

வளர்மதி வேலை பார்க்கும் கல்லூரிக்கு சென்றான்.

வளர்மதியைப் பார்க்க வேண்டும் என்று அலுவலகத்தில் சொன்னான்

'இப்போது அவங்களுக்கு பீரியட் இல்லே...நூலக இன்சார்ஜ் கூட அவங்கதான்..மாடியில் போய் பாருங்க'

அலுவலகப் பெண் சொன்னதும் மாடி ஏறினான்.முதல் அறையே நூலகம்.

உள்ளே நுழைந்தான் விஜயன்.

'பாரதியார் கவிதைகள்' நூலைப் படித்துக் கொண்டிருந்த வளர்மதி காலடிச் சத்தம் கேட்டுத் திரும்ப,

எதிரே விஜயன்!

அவள் இதை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.வியப்பு மேலிட தன் அரிய பெரிய விழிகளை மேலும் பெரிதாக்கி,

'நீங்களா ப்ளீஸ் உட்காருங்க' என்று கூறி இயல்பாய் சிரித்தாள்.

காலையில் தரகர் வந்திருந்தார்

அவன் ஆரம்பித்ததுமே 'சென்ற வாரமே தரகர்கிட்ட அப்பா பதிலை சொல்லிட்டாங்களே' முடிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள். 'தப்பா நினைக்காதீங்க,நீங்க தான் பிடிக்கலேன்னு சென்னதா தரகர் சொன்னார்.ஒருவேளை நீங்க வேறு யாரையும் நேசிக்கிறீங்களா?'

'நோ,நோ' அவசரமாய் மறுத்தாள் வளர்மதி.

'அப்புறம் ஏன்?நான் ஏறத்தாழ நூறு இடத்துல பெண் பார்த்தேன்.யாரையும் பிடிக்கலே.முதன்முதலா பிடிச்சிருந்தது உங்களைத்தான்.இப்பகூட நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் கட்டாயப்படுத்த வரலை.உங்க நிராகரிப்பின் காரணம் தெரிஞ்சிட்டுப் போகணும்னு தான் நேரில வந்தேன்'.

'கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க.ஒரு இடத்துல நிராகரிப்புன்னதும் உங்களை அது ரொம்பவும் பாதிச்சு நேரில் வந்து அந்த பெண் கிட்டேயே காரணமும் கேட்கிறீங்களே. நீங்க நூறு இடத்துல பார்த்த நூறு பெண்களை நிராகரிச்சிருக்கிறிங்களே,அப்ப அவங்க மனசு எந்த அளவுக்கு கவலைப்பட்டிருக்கும்னு எப்போதாவது நீங்க யோசிச்சதுண்டா?'

நியாயமான கேள்வி.நெருஞ்சியாய் குத்துகிற கேள்வி.

அன்று பெண் பார்க்கும்போது விஜயன் 'நூறு இடத்துல பார்த்தோம். யாருமே மனசுக்கு பிடிக்கலே' என்று பெருமையுடன் சொன்னபோது அவனைப் பிடித்திருந்தும் 'அப்பா இந்த இடம் வேண்டாம்ப்பா' என்று வளர்மதி சொன்னாள்.அதை இப்போது நேரில் வந்த விஜயனிடமும் சொல்லி விட்டாள்.

'ஸாரி வளர்மதி. என்னோட சுயநலத்துக்காக எத்தனை பேரை நோகடிச்சிருக்கேன்னு இப்ப உங்க மூலமா தெரிஞ்சுக்கிட்டேன். வர்றேன்' சொன்னவன் எழுந்து காருக்கு வந்தான்.வளர்மதியின் கேள்வி மட்டும் நெஞ்சில் நெருஞ்சியாய் குத்திக்கொண்டிருக்க யோசித்தபடி காரை நகர்த்தினான்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வு கொண்டுவா தீபத்திருநாளே

மங்கலம் பொங்கிட
எம் இல்லங்கள் தோறும்
மணம் பரப்பி நிற்கும்
தீபத் திருநாளே!
உன் வரவால்
தூய்மை பெறட்டும்
எம்முள்ளங்கள்

கடந்து வந்த காலங்களில்
நாம் பட்ட
துயரச் சோகங்களும்
சுமைகளும்
இனி ஒரு தரம்
எம் மண்ணில்
வேண்டாம் எமக்கு!

மறைத் தமிழினத்தின்
சோகங்கள்
மாறாத வடுவாய்
எம் இதயத்தினுள்
அணையா விளக்காக
தொடராது காக்க
வசந்தங்கள் பூப்பூக்கும்
புது வாசல்கள் நீ திறவாய்!

புதிது புதிதாய்
பூமியில் முளைவிடும்
மகிஷா சூரர்களை
அழித்தொழித்து
புத்தம் புது தீபாவளியே
நித்தமும் எம் வாழ்வில்
நிம்மதி மழை தூவுவாய்!

பூவையர் வாழ்வு
புன்னகைக்க புதுவாழ்வு
வழி பிறக்க
புதுத் தென்றல் எங்கும்
கானம் இசைக்கட்டும்
பூமியெங்கும் உன்வரவால்
அமைதி பிறக்கட்டும்.

**செல்வநாயகம் ரவிசாந், வீரமனை, குப்பிளான்.**




# ஒளியை நோக்கி...

உதிக்கும் ஒளியை உவந்தே கண்கள்
உற்று நோக்கி மகிழும்
உள்ளம் எல்லாம் உணர்ச்சி பொங்க
ஒன்றாய்க் கூடி களிக்கும்

எதிலும் ஒளியும் இருளும் எதிராய்
இருப்பதுலகில் உண்மை
என்றும் உயர்த்தும் ஒளியின் பக்கம்
இருந்தால் நமக்கு நன்மை

இருளில் வாழ்வோர் என்றோ ஒருநாள்
இருந்திடாமல் மாள்வார்
இருக்கும் இடத்தில் ஒளியைக் கொள்வோர்
இறப்பினும் அவர் வாழ்வார்

நரகாசுரனின் இறந்த நாளை
ஒளியின் பிறப்பாய் கொள்வோம்
நமக்குள் இருக்கும் அரக்கத்தனத்தை
நன்றாய் அறிந்து வெல்வோம்

அரக்கத் தலைகள் புவியில் இருந்து
அகன்று விடச் செய்வோம்
அழிவில் இருந்து புவியைக்காக்க
ஆர்வமுடன் உழைப்போம்

கருவில் இருந்தே பொய்,களவு
கதைகள் முடிய இணைவோம்
கவலை,கயமை,சிறுமை,இருள்
அகன்ற உலகைப் புனைவோம்

**ஜீ.ஒகஸ்டின், லுணுகலை.**

# தித்திக்கும் தீபாவளி


நித்தம் யுத்தம் எனும்
நிலை மறந்து
பட்டாசுச் சத்தம்
வானை முட்ட
ஆடிப் பாடி கொண்டாட
அதோ! வருகிறது தீபாவளி

அசுரன் அழிந்தது போல
எங்கள் உள்ளங்களின்
கெட்ட எண்ணங்களையும்
அழித்தொழித்து பூரிப்பால்
அபிஷேகம் செய்ய
புறப்பட்டு வருகிறது தீபாவளி

வட்டாரம் முழுக்க
பட்டாளமாய் பிள்ளைகளைக் கூட்டி
பட்டாசு வெடிப்போம்
திண்பண்டம் எல்லாம்
பகிர்ந்து உண்டு
புத்தாடை பூண்டு
கோயிலுக்குச் செல்வோம்
மருந்து போன்ற இந்நாளில்
விருந்து படைப்போம்
மகிழ்வாய் இருப்போம்

பயிர் வாழ மழை வேண்டும்
உயிர் வாழ மனம்தான் வேண்டும்
நறுமணம் மிக்க புதுமணம் கொள்வோம்
அன்பாய், நட்பாய் யாவரும் வாழ
இன்றைய நாளில் உறுதி பூணுவோம்.

**உ.மு.லுத்பி, மூதூர்**



# சில்லென ஒரு நிலவு

காலை நேரம் கடற்கரைசாலை ஓரம்
பேருந்தில் வந்திறங்கியது சில்லென ஒரு நிலவு
என் விழி மூடாமல் அவளை ரசித்தன
மெதுவாக என்னருகில் வந்து சிரித்தாள்
கடற்காற்று கூட குளிர்ந்தது அவள் புன்னகையால்
முகத்தில் கலைந்த கூந்தலை காது மடலில் சொருகும்
அழகைப் பார்த்து சொக்கிப் போனது எனது உள்ளம்
நடந்தோம் சிலதூரம் உள்ளங்கள் மகிழ
கவலைகள் மறந்து
பிரிந்தோம் சிறுநேரத்தில் சந்திக்கும் எண்ணத்தோடு

**மனோஜ், கொழும்பு-15.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில் வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,**
**கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேற்றுக்கிரக வாசிகள் வருகிறார்கள்?

பூமியில் வாழும் ஜீவராசிகளைத் தவிர, பிற கிரகங்களில் உயிரினங்கள் உள்ளனவா என்ற கேள்வி காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடைபெற்று வரும் ஆய்வுகள், வேற்றுக் கிரக உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியங்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றன. எனினும் இன்று வரை உறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஆதாரங்கள் எப்போது கிடைக்கும் என்பதும் நமக்குத் தெரியாது. எனினும், வேற்றுக்கிரக ஜீவராசிகள் உருவாவதற்கும் வாழ்வதற்கும் உள்ள சூழல் குறித்து அறிவுஜீவியான ஸ்டீபன் ஹொக்கிங்ஸ் தன்னுடைய இயற்பியல் மற்றும் பிரபஞ்ச அறிவைப் பயன்படுத்தி வேற்று கிரக உயிரினங்கள் எப்படியிருக்கும் என்று தர்க்க ரீதியில் விளக்குகிறார். நமது அறிவைத் தட்டி எழுப்பும் அவரது கருத்துகளின் சாராம்சம் இதோ;

வேற்றுக் கிரக உயிரினங்கள் நட்சத்திர மண்டலங்களுக்குள் இருக்கலாம். அல்லது பிரபஞ்சத்தின் மேகக்கூட்டங்கள் போன்ற பகுதிகளில் நுண்ணுயிர்களாக இருக்கலாம். கண் இமைக்கும் நேரத்தில் வாழ்ந்து மறைந்துவிடக் கூடிய நுண்ணுயிரினங்கள் கூட இருக்கலாம். ஆகவே பிரபஞ்சத்தில் உயிரினங்களில் எதைத் தேடுவது எங்கு தேடுவது என்ற கேள்விகள் முக்கியமானவை. பிரபஞ்சத்தில் இயற்பியல் விதிகள் எல்லாம் ஒன்றாக இருக்கும் பட்சத்தில், உயிர் வாழ்க்கைக்கான விதிகளும் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால் நாம் வாழும் இந்தத் தாய்ப் பூமியில் உயிரினம் தோன்றியது பற்றி நாம் அறிந்துகொண்டால் இந்தத் தேடலைத் தொடங்க முடியும்.

45 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கு எது காரணமாக அமைந்தது என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. ஆனால், இங்கு அபரிமிதமாக இருந்த அமினோ அமில குட்டைகளில் அணு மூலக்கூறுகள் ஒரு கச்சிதமான ஒருங்கிணைவு நிகழும் வரை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருந்தன. பிறவி எனும் ஓர் உயிர் தோன்றும் வரை இந்த மோதல்கள் நடந்தன. எந்தத் தூண்டலும் இன்றி உயிர் தோன்றியிருக்க முடியுமா என்பது தெரியவில்லை. பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கு முன்பாக வேற்றுக் கிரகங்களில் தோன்றிய உயிர்கள் இங்கு பரவியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. பூமியில் விழுந்த கற்களின் இடைப்பகுதியில் அந்த உயிரினங்கள் இருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கலாம். அந்த உயிரினங்கள் விண்வெளியின் வெப்பத்தையும் வெற்றிடத்தையும் தாங்கும் திறனைப் பெற்றிருந்திருக்கும்.

உயிர் தோன்றிவிட்டால், அதற்கடுத்து உள்ள அம்சம், உயிர் வாழ்தல், உயிர் வாழ்தலுக்கு ஓர் ஆதாரம் தேவைப்படுகிறது. அதை நாம் உணவு என்கிறோம். ஒருமுறை ஊட்டம் பெற்ற உயிர் அடுத்து சூழ்நிலைக்கு ஏற்ப வாழத் தன்னை மாற்றிக்கொள்கிறது. இனப்பெருக்கம் செய்கிறது. பரிமாண வளர்ச்சிக்கும் வித்திடுகிறது. பரிமாண வளர்ச்சி என்பது பூமிக்கு மட்டும் பொதுவானது அல்ல. அது வேற்றுக் கிரகவாசிகளுக்கும் பொதுவானது. வேற்று கிரகங்களில் தண்ணீர் கண்டுபிடிக்கப் பட்டால் அங்கு ஜீவராசிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. வேற்றுக் கிரகவாசிகள் இருக்கிறார்களா என்ற கேள்விக்கு இந்தப் பிரபஞ்சத்தில் அபரிமிதமாக உள்ள தண்ணீர் நல்ல பதில் அளிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. தண்ணீர் இருந்தாலும் அந்தக் கோளின் இருப்பிடம் அதிக வெப்பம் மற்றும் குளிர் இல்லாத இடங்களாக இருக்க வேண்டும். அப்படியானால் சூரியனைச் சுற்றி உள்ள இரு கோள்களான பூமி மற்றும் செவ்வாய் அந்த வாய்ப்பைப் பெறுகின்றன. 1970 களிலிருந்து மனிதர்கள் செவ்வாயை ஆராய்ந்து கொண்டிருந்தாலும் அங்கு உயிர் இருப்பதை உறுதி செய்யவில்லை. நாசா தண்ணீருடன் இணைந்த ஓர் வெண்ணிற உப்பைக் கண்டறிந்தது. உயிர் வாழ்வதற்கான ஈரப்பதம் அங்கு இருக்கிறது. ஆகவே அந்த முயற்சியை விஞ்ஞானிகள் கைவிடமாட்டார்கள்.

இதைத் தவிர நமது சூரிய குடும்பத்தில் உயிர் இருப்பதாகக் கருதக்கூடிய இன்னொரு இடம் வியாழன். கோளைச் சுற்றிவரும் துணைக்கோளான ஐரோப்பா. இது 3200 கி.மீ. விட்டமும் மைனஸ் 260 டிகிரி குளிர் நிலையும் கொண்ட சிறிய துணைக்கோள். இக்கோள் சுற்றிவரும் பாதை வட்ட வடிவமாக இருப்பதால் வியாழனின் ஈர்ப்பு விசையால் துணைக்கோளின் இயக்கத்தின்போது உட்புறமாக வெப்பம் உருவாகியிருக்கலாம். அதனால் பனிக்கட்டிகளுக்குக் கீழே கடல் இருக்கலாம். அங்கு வாழத்தகுந்த உயிரினங்கள் உருவாகியிருக்கலாம். நமது ஆழ்கடல் உயிரினங்களைப் போல் அங்கு உயிரினங்கள் இருக்கலாம். அங்கு மேம்பட்ட உயிர்கள் வாழ்ந்தாலும் அவை அவற்றுக்கு மேலே 25 கி.மீ. பனி உறைந்த நிலையில் இருப்பதால் அவற்றுக்குப் பிரபஞ்சம் இருப்பது தெரியாது. அவர்கள் நம்முடன் தொடர்புகொள்ளமாட்டார்கள்.

நமது சூரிய மண்டலத்தைத் தவிர வேறு இடங்களில் உயிர்கள் இருக்கிறதா என்பதையும் நாம் தேட வேண்டும். 1995 ஆம் ஆண்டில் முதலில் ஒரு வேற்றுக்கிரகம் இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட கோள்கள் கண்டறியப்பட்டு விட்டன. அந்தக் கோள்களில் திரவ வடிவில் தண்ணீர் இருக்கலாம். பரிணாமத்தின் சக்தியால் அங்கு வேற்றுக்கிரக ஜீவராசிகள் நமக்கு அறியப்பட்டவைபோலக் கூட இருக்கலம். தரையில் வாழக்கூடியவையாக இருந்தால் அவற்றுக்கு கால்கள் இருக்க வேண்டும். கண்கள் அமைந்திருந்தால் அது பூமியிலுள்ள ஜீவராசிகளை ஒத்த அமைப்பை உடையதாக இருக்கும் பரிணாமத்தின் உச்சகட்ட எல்லைகளை நம்மால் உணர முடியாது.

வேற்றுக்கிரக வாசிகள் நம்மவர்களைக் கடத்திச் செல்வதாக நிறையக் கதைகள் வந்திருக்கின்றன. ஆனால், அவர்கள் ஏன் நம்மைக் கடத்த வேண்டும். நாம் 40 ஆண்டுகளாக விண்வெளியை கவனித்துக் கொண்டிருக்கிறோம். ஓரேயொரு மர்மமான வாய்ப்பைத் தவிர, வேறு எந்த அறிகுறியையும் வேற்றுக் கிரகவாசிகளிடமிருந்து நாம் பெறவில்லை. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஒஹயோவில் இருக்கும் ஒரு ரேடியோ டெலஸ்கோப் ஒரு சமிக்ஞையை கிரகித்தது. ஒரு கம்ப்யூட்டர் 6 எழுத்துகளும் எண்களும் கொண்டதாக அதைப் பதிவு செய்தது. ஆங்கிலத்தில் இது வாவ் என்று அறியப்பட்டது. இது வேற்றுக்கிரகவாசிகள் இந்த சமிக்ஞையை அனுப்பியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த வாவ் சமிக்ஞை 200 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திர மண்டலத்திலிருந்து வந்ததாகத் தோன்றியது. அதற்குநாம் ஒரு பதில் அனுப்பினால் அது அவர்களைச் சென்றடைய 200 ஆண்டுகள் ஆகும். அந்தக் காலத்திற்குள் அவர்கள் தகவல் அனுப்பியதே மறந்து அதற்குப் பதில் வருகிறதா என்று கவனிப்பதையே விட்டுவிடுவார்கள். அதைவிட மோசமாக அவர்கள் தங்களையே அழித்துக் கொண்டும் விடலாம். மனித இனம் மிக விரைவாக அணுகுண்டின் சக்தியைக் கண்டறிந்து கொண்டது. அதே விடயம் அந்த வேற்றுக் கிரகவாசிகளின் விடயத்திலும் நடந்தால் அவர்களும் நீண்டநாள் வாழ முடியாது. வேற்றுக்கிரக வாசிகளைத் தேட நாம் அவர்களது செய்திகளைக் கவனிக்கலாம். அல்லது நாம் பேசத்தயாராக இருப்பதாக நம்முடைய ஆர்வத்தை ஒலிபரப்புச் செய்யலாம்.

ஆனால், நாம் என்ன சொல்லப் போகிறோம் என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவர்கள் முதுமை அடைவதை வெற்றிகொண்டு சாகா நிலைமையைக் கூட அடைந்திருக்கலாம். அதற்கும் மேலாக இந்த மேம்பட்ட நிலையை அவர்கள் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்திருக்கலாம். இது நடக்காது என்று தோன்றினாலும் நீங்கள் இதைத் தர்க்க ரீதியாக சிந்தித்தால் ஒரு குகைவாசிக்கு அல்லது ஆதிவாசிக்கு ரொக்கெட் விண்கலம் எப்படியோ அப்படி அவர்களுடைய தொழில்நுட்பமும் நமக்கு இருக்கும். அவர்கள் வாழும் கிரகங்களுக்கு ஆபத்து வரும்போது அல்லது அவர்கள் கிரகங்களில் வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போது அவர்கள் மற்றக் கிரகங்களில் உள்ள தண்ணீர் உள்ளிட்ட இயற்கைப் பொருட்களைப் பிரமாண்டமான விண்வெளிக் கப்பல்களுடன் வந்து அவர்கள் சூறையாடலாம். எனவே, நாம் காலத்தை வெல்லும் வயதை அடைவதையும் வேற்றுக்கிரகங்களில் சென்று குடியேறும் அளவுக்கான திறமையையும் ஒரு காலத்தில் நாமும் பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிப்ஸ் மீது நடவடிக்கை

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் ஹன்ஸி குரோஞ்ஞே கிரிக்கெட் சூதாட்டத்தில் பகிரங்கமாக ஈடுபட்டது குறித்து தனது சுயசரிதையில் மனம் திறந்துள்ளார் கிப்ஸ்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் ஹெர்ஷல் கிப்ஸ். 36 வயதான இவர் 'ரூ தி பொயின்ட்' என்ற பெயரில் சுயசரிதை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் தென்னாபிரிக்க வீரர்கள் மீது அதிரடியான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளார்.

இவர் 2000இல் இந்தியத் தொடரின் போது அப்போதைய தென்னாபிரிக்க அணியின் கப்டன் குரோஞ்ஞேயுடன் இணைந்து சூதாட்டத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து இவருக்கு 6 மாதத் தடையும் அபராதமும் விதிக்கப்பட்டது. சூதாட்டத்தில் ஈடுபட்டது குறித்து தனது புத்தகத்தில் கிப்ஸ் கூறியிருப்பதாவது;

2000இல் நாக்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டி குறித்து என்னிடம் பேசினார் குரோஞ்ஞே. அப்போது நான் எனது அறையிலிருந்தேன். என்னிடம் வந்த அவர் இப்போட்டியில் 20 ஓட்டங்களுக்குள் நீ அவுட்டாக வேண்டும். அப்படி செய்தால் 21 இலட்ச ரூபா வரை பெறலாம் என்றார்.



குரோஞ்ஞே சூதாட்டத்தில் ஈடுபட்டது அது முதல் முறையல்ல. அதற்கு முன் 1996 ஆம் ஆண்டு இந்தியத் தொடரின் போதும் அவருக்கு சூதாட்டத்தில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அணி வீரர்கள் அனைவரையும் அழைத்து இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் நாம் தோற்றால் 3 கோடி ரூபா வரை கிடைக்கும் என்றார். இதில் ஒரு இந்திய வீரருக்கும் தொடர்புண்டு. அவரை எனக்குத் தெரியும். ஆனால் அப்போட்டியில் தென்னாபிரிக்க அணி தோற்கும் நிலைமையில் தான் இருந்தது. அணியில் 6 வீரர்கள் காய்ச்சலால் அவதிப்பட்டு வந்தனர். அதனால் சூதாட்டத்தில் ஈடுபடும் எண்ணத்தை அனைவரும் கைவிட்டோம்.

அப்போட்டியில் சச்சின் சதமடித்து அசத்த இந்திய அணி வெற்றி பெற்றது. அணியில் உள்ள வீரர்களில் 90 சதவீதம் பேர் ஒத்துழைப்புக் கொடுத்தால் மட்டுமே சூதாட்டத்தில் ஈடுபட முடியும். கப்டன் குரோஞ்ஞே மட்டும் குற்றவாளி அல்ல. 2000 இல் நடந்த பிரச்சினைக்குப் பின் இதுவரை தென்னாபிரிக்க அணி சூதாட்டத்தில் ஈடுபடவில்லையென்று கிப்ஸ் தெரிவித்துள்ளார்.

**ஆரவாரக் கொண்டாட்டம்**

இந்திய வீரர்கள் குறித்து கிப்ஸ் தனது சுயசரிதைப் புத்தகத்தில் சுவாரஸ்யமாக எழுதியுள்ளார். இது குறித்து அப்புத்தகத்தில் டெக்கான் சார்ஜஸ் அணியின் சார்பில் ஐ.பி.எல். போட்டிகளில் நான் பங்கேற்றேன். 2009 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் டெக்கான் சாம்பியன் கிண்ணத்தை வென்றது. எனது அணியில் இடம்பெற்றுள்ள இந்திய வீரர்கள் அதிகம் மது அருந்த மாட்டார்கள். ஆனால் வெற்றி பெற்றால் அவர்களது ஓய்வறை கூச்சலும் சத்தமுமாகவும் இருக்கும்.

இந்திய கிரிக்கெட் நண்பர்கள் பலர் களத்தில் வெறுப்பேற்றும் விதமான அமைதி காப்பர். ஆனால் அவர்கள் கைகளில் கிண்ணம் என்று ஒன்றை கொடுத்துவிட்டால் போதும் அதன் பிறகு ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்தான். வெற்றி பெற்றால் இவ்வளவு உற்சாகமடையும் ஒரு அணியை நான் இதுவரை பார்த்ததில்லை என்றே கருதுகிறேன்.



**பொலிவூட் வாய்ப்பு**

பொலிவூட் படங்களில்நடிக்க தனக்கு வாய்ப்பு வந்திருப்பதாக கிப்ஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது புத்தகத்தில் எழுதியிருப்பதாவது பொலிவூட் படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது. அநேகமாக இப்படம் அடுத்த ஆண்டு மே மாதம் தொடங்கப்படலாம். ஒரு நாள் நடித்துக் கொடுத்தாலே போதும் அதிக பணம் கிடைக்குமென எனது முகவர் தெரிவித்தார். இந்தியாவில் எப்போதும் எனக்கு ஆச்சரியம் காத்திருக்கும் என எழுதியுள்ளார்.

**ஒழுங்கு நடவடிக்கை**



சுயசரிதை எழுதி தென்னாபிரிக்க வீரர்களின் மனதை புண்படுத்திய கிப்ஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அந்நாட்டு கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாக அதிகாரி ஜெரால்ட் மஜ்லோ கூறுகையில்;

கிப்ஸ் எழுதிய புத்தகத்தை நான் இதுவரை படிக்கவில்லை. அதனால் அது குறித்து எதுவும் பேசவிரும்பவில்லை. இப்புத்தகத்தால் தென்னாபிரிக்க வீரர்கள் பலரும் மனதளவில் காயமடைந்துள்ளனர். ஒழுங்குமுறை குழுவின் அறிக்கைக்காகக் காத்திருக்கிறோம். அதற்குப் பின் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்றார்.



கிப்ஸ் எழுதியுள்ள சுயசரிதையில் தென்னாபிரிக்க அணி வீரர்களைப் பற்றியும் அந்த அணியின் செயற்பாடுகள் பற்றியும் கூறிய தகவல்கள் கிரிக்கெட் உலகில் குறிப்பாக தென்னாபிரிக்க வீரர்களிடத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. என்றாலும் சூதாட்டப் புகாரில்தடை செய்யப்பட்டு மீண்டும் வந்த ஒரு வீரர் தன் அணியைப் பற்றி அவதூறு பேசுவதில் நியாயமில்லை என்று கடும் விமர்சனமும் எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலை சமாளிக்குமா?

இந்திய நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் ஆமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. சொந்த மண் பலத்தில் களமிறங்கும் வலியமையான இந்தியாவை, நியூஸிலாந்து அணி சமாளிப்பது கடினம் தான். இப்போட்டியில் இந்தியாவின் சச்சின் 50 ஆவது சதத்தை எட்டி புதிய வரலாறு படைப்பார் என நம்பப்படுகிறது.

மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க நியூஸிலாந்து அணி இந்தியா வந்துள்ளது. இரு அணிகளிடையிலான முதல் டெஸ்ட் ஆமதாபாத்தில் சர்தார் படேல் மொடிரா மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்திய அணி சர்வதேச டெஸ்ட் தரப் பட்டியலில் நம்பர்-1 இடத்திலுள்ளது. சொந்த மண்ணில் வியக்கத்தக்க ஆட்டத்தை வெளிப்படுத்தும் இந்திய அணி கடந்த இரண்டு ஆண்டுகளில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக மட்டும் இரண்டு முறை தோற்றது. கடைசியாக கொல்கத்தா டெஸ்டில் (தென்னாபிரிக்கா) வென்ற இந்தியா அடுத்து அவுஸ்திரேலியாவுடன் அடுத்தடுத்து வென்று ஹார்ட்ரிக் சாதனை படைத்துள்ளது.




**சச்சின் பலம்:** கடைசியாக சச்சின் பங்கேற்ற 9 டெஸ்டில் (15 இனிங்ஸ்) இரண்டு இரட்டைச்சதம் உட்பட 6 சதத்துடன் மொத்தம் 1270 ஓட்டங்கள் குவித்து (சராசரி 97.69) நல்ல போர்மில் உள்ளார். இந்த டெஸ்டிலும் இவர் தனது அனுபவத்தை தொடரும் பட்சத்தில் சர்வதேச அளவில் 50 சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமை பெறலாம். தவிர எவ்வித பந்து வீச்சையும் துவம்சம் செய்து அதிரடி தொடக்கம் கொடுக்கும் செவாக், லட்சுமண் என இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை வலுவாக உள்ளது.

இவர்களுடன் டிராவிட், காம்பீரும் போர்மை மீட்கும் பட்சத்தில் எளிதாக ஓட்டங்கள் குவிக்கலாம். கடைசியாக இங்கு நடந்த இலங்கைக்கு எதிரான டெஸ்டில் இந்தியா 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் என திணறிய போது டிராவிட் தான் சதமடித்து (177) மீட்டார். இதேபோல் மீண்டும் கலக்கலாம். இவர்களுடன் பின் வரிசையில் கப்டன் தோனி, ரெய்னா ஆகியோரும் காத்திருக்கின்றனர்.

**விக்கெட் வேட்டை:** வேகப் பந்து வீச்சாளர்கள் சகிர் கான் (254 விக்.), இஷாந்த் சர்மா (76), ஸ்ரீசாந்த் (62) ஆகிய மூவரும் இணைந்து 109 டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 392 விக்கெட் வீழ்த்திய அனுபவத்தில் உள்ளனர். இவர்களுடன் இதே மைதானத்தில் இதுவரை 28 விக்கெட் சாய்த்த ஹர்பஜன், பிரக்யான் ஓஜா போன்ற சுழற்பந்து வீச்சாளர்களும் நம்பிக்கை தருவார்கள்.

**எழுச்சி பெறுமா:** அதே நேரம் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரை மோசமாக இழந்த நியூஸிலாந்து அணிக்கு இந்தியாவின் துடுப்பாட்ட படையை எதிர்கொள்ள அசாத்திய சக்தி கட்டாயம் தேவைப்படும். இந்த அணியின் தொடக்க ஜோடி மோசமாக உள்ளது. இதனால் பிரண்டன் மெக்கலத்தை தொடக்க அல்லது 3 ஆவது இடத்தில் களமிறக்க முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து வெட்டோரி கூறுகையில்; டெஸ்ட் அணியில் தொடக்க இடம் என்பது எப்போதுமே எங்களுக்கு பிரச்சினையாக உள்ளது. சமீபத்தில் நல்ல போர்முக்குத் திரும்பியுள்ள மெக்கலம் ஒருநாள் அணி போல் இந்த இடத்தை சரியாக நிரப்புவார் என நம்புகிறோம் என்றார். இவர் தவிர ரோஸ் டெய்லர், ரை




டர் அறிமுக வில்லியம்சனும் ஓட்டக் குவிப்புக்கு உதவுவார்கள் எனத் தெரிகிறது.

பலவீனப் பந்துவீச்சு; பந்துவீச்சில் 56 டெஸ்டில் 187 விக்கெட் வீழ்த்திய கிறிஸ் மார்டின் மட்டும்தான் அனுபவசாலி மற்றப்படி வாட்லிங், ஆன்டி மேக்கே ஆகியோர் புதியவர்கள் தான், சுழலில் கப்டன் வெட்டோரியின் அனுபவம் கைகொடுக்கலாம்.

மொடிரா மைதானத்தில் விளையாடிய இரண்டு போட்டியையும் டிரா செய்த ஆறுதலுடன் நியூஸிலாந்தும் உள்ளது. ஆனால், இங்கு 3 இல் இந்தியா வென்றுள்ளது. தவிர கடைசி 6 போட்டியில் 5 இல் வென்ற உற்சாகத்துடன் களமிறங்கியுள்ள தோனியின் படையை நியூஸிலாந்து சமாளிக்குமா என்பது சந்தேகம் தான்.

வேகத்துக்கு கைகொடுக்கும். ஆமதாபாத்தில் நடந்த கடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்காவின் ஸ்டைன் இலங்கையின் வெலகெதர போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

**புதிய சாதனையை நோக்கி...**

முதல் டெஸ்ட் போட்டி நடக்கும் ஆமதாபாத் சர்தார் படேல் மைதானத்தில் பல புதிய சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. 1987 (எதிரணி, பாகிஸ்தான்) இந்திய லிட்டில் மாஸ்டர் கவாஸ்கர் சர்வதேச அளவில் 10,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை இங்கு படைத்தார்.

1993-94 இல் இலங்கையின் திலகரத்னவை அவுட்டாக்கிய கபில்தேவ், டெஸ்ட் போட்டிகளில் 432 விக்கெட் வீழ்த்தி நியூஸிலாந்து வீரர் ஹாட்லீயின் (431) சாதனையை முறியடித்தார்.

கும்பிளே தனது 350 ஆவது விக்கெட்டை (எதிரணி-நியூஸிலாந்து) இந்த மைதானத்தில் தான் கைப்பற்றினார்.

சச்சின் தனது முதல் இரட்டை சதத்தை நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்டில் (1999-2000) இங்கு அடித்தார்.

முதல் தர கிரிக்கெட்டில் 200 ஆவது கேட்சை டிராவிட் இம் மைதனத்தில் தான் பிடித்தார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி முதல் தர கிரிக்கெட்டில் 10,000 ஓட்டங்களை கடந்தது இங்கு தான்.

இந்திய துணைக்கண்டத்தில் குறைந்த ஓவரில் முடிந்த (20 ஓவர்) டெஸ்ட் இனிங்ஸ் என்ற வேதனையான சாதனையை இந்தியா (எதிரணி-தென்னாபிரிக்கா) இங்குதான் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தியது.

1996 இங்கு நடந்த டெஸ்டில் தென்னாபிரிக்காவின் 6 வீரார்களை டக் அவுட்டாக்கிய வீரர் என்ற பெருமையை இந்தியாவின் ஸ்ரீநாத் ஏற்படுத்தினார்.

இந்த வரிசையில் இப்போட்டியில் இந்தியாவின் சச்சின் 50 ஆவது சதத்தை நிறைவு செய்து வரலாறு படைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**200 ஆவது கேட்ச்:** முதல் தர போட்டிகளில் மொடிரா மைதானத்தில் 200 ஆவது கேட்ச் பிடித்து சாதித்துள்ள டிராவிட் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 198 கேட்ச் பிடித்துள்ளார். பல சாதனைகளுக்கு உதவும். இங்கு 200 ஆவது கேட்ச் என்ற மைல்கல்லை டிராவிட் எட்டுவார் என எதிர் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவாயுத ஒழிப்புக்கான கோஷமும் விருத்திக்கான இணக்கப்பாடும்



## உலக வலம்

ச.துஷ்யந்தினி

அணுவாயுத ஒழிப்புக்கான கோஷங்கள் உலக அரங்கில் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கும் நிலையில் அணுவாயுத அபிவிருத்தி மற்றும் அணுவாயுத பரிசோதனைகளில் இணைந்து செயற்படுவதற்கான முக்கிய உடன்படிக்கையொன்றில் இருபெரும் வல்லரசு நாடுகள் இவ்வார நடுப்பகுதியில் கைச்சாத்திட்டுள்ளன.

பாதுகாப்பு மற்றும் அணுவாயுத விவகாரத்தில் இணைந்து செயற்படுவதற்கான உடன்படிக்கையில் பிரிட்டிஷ் பிரான்ஸ் தலைவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திட்டுள்ளனர்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது சக்தித் தேவையை பூர்த்தி செய்வதற்காக அணுத்தொழில்நுட்பத்தைப் பெற முயற்சித்தாலே அதற்கெதிராக பலத்த கோஷமிடும் உலகத் தலைவர்கள் இவ் விவகாரத்தில் மட்டும் மௌனம் காப்பது ஏனென்று புரியவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வருடம் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்களில் அவர் அணுவாயுத ஒழிப்புக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததும் ஒன்றாகும்.

இந்நிலையில் அணுவாயுத அபிவிருத்தி மற்றும் பரிசோதனைகளுக்கு உந்துசக்தியாக அமையும் இவ் உடன்படிக்கை தொடர்பில் ஒபாமா கூட வாய்திறக்கவில்லை.

ஆனால் இவ்வாறானதொரு உடன்படிக்கையை ஈரானோ அல்லது வடகொரியாவோ ஏனைய நாடுகளுடன் மேற்கொண்டிருந்தால் 'அணுவாயுத ஒழிப்புக்கான போர்' என்ற போர்வையில் அமெரிக்கா தலைமையிலான வல்லரசு நாடுகளின் படைகள் அந்நாடுகளை ஆக்கிரமித்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்நிலையில் பாதுகாப்பு மற்றும் அணுவாயுத விவகாரத்தில் இணைந்து செயற்படுவதற்காக பிரான்ஸுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள புதிய உடன்படிக்கைகளை பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான நீண்டகால வரலாற்றில் புதியதொரு அத்தியாயமென பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வர்ணித்துள்ளார்.

இவ்உடன்படிக்கைகளின் பிரகாரம் அணுவாயுத பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்பத்தை விருத்தி செய்யும் நிலையங்கள் இரு நாடுகளிலும் அமைக்கப்படவுள்ள அதேவேளை விசேட திறன்களைக் கொண்ட கூட்டு இராணுவப் பிரிவொன்றும் அமைக்கப்படவுள்ளது.

இவ் உடன்படிக்கைகள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான பிரிட்டனின் ஆற்றலை மட்டுப்படுத்துமென எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

ஆனால் இவை பிரஜைகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் பெருமளவு பணத்தை சேமிப்பதற்கும் உதவுமெனத் தெரிவித்துள்ள கமரூன்:

பிரிட்டனும் பிரான்ஸும் எப்போதும் இறையாண்மையைக் கொண்ட நாடுகளாகவே இருக்கும்.எமது படைப்பிரிவை சுயாதீனமாக நடவடிக்கையில் ஈடுபடுத்துவதையோ அல்லது எமது தேசிய நலனுக்கான நடவடிக்கைகளையோ இவை கட்டுப்படுத்தாது எனக் கூறியுள்ளார்.

முன்னெப்போதையும் விட மிக நெருக்கமாகச் செயற்படுவதற்கு இவ் உடன்படிக்கைகள் வழிவகுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு நாடுகளிலிருந்தும் சுமார் 5 ஆயிரம் படைவீரர்களைக் கொண்ட விசேட கூட்டுப் படைபிரிவொன்று உருவாக்கப்படவுள்ள அதேவேளை இரு நாட்டுக்குமிடையிலான




கடற்பரப்பில் விமானம் தாங்கிக் கப்பலை நிறுத்தி வைப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் பயிற்சி மற்றும் படை நடவடிக்கை போன்ற சில காரணங்களின் அடிப்படையில் ஒரு நாட்டின் விமானம் தாங்கிக் கப்பலை மற்றைய நாடு பயன்படுத்துவதற்கும் இவ் உடன்படிக்கை அனுமதியளித்துள்ளது.

இவ் உடன்படிக்கைகளின் பிரகாரம் உண்மையான ஒருங்கிணைந்த விசேட படைப்பிரிவொன்று உருவாகுமெனத் தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்கோஸி இது மற்றைய நாட்டின் இறையாண்மையை மீறும் என்ற கருத்துகளை நிராகரித்துள்ளார்.

இதேவேளை இராணுவ நடவடிக்கையொன்றுக்கு ஒரு நாடு ஆதரவளித்து மற்றைய நாடு ஆதரவளிக்காத பட்சத்தில் என்ன நடக்கும்?என்ற கேள்விகளை எதிர்கொண்ட இரு தலைவர்களும் அரசியல் இணக்கப்பாட்டின் பிரகாரம் இதற்கு தீர்வு காணப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவ ஒத்துழைப்பு தவிர கனியங்களின் அளவை அறிதல் மற்றும் செய்மதித் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் இணைந்து பணியாற்றுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

பல மில்லியன் யூரோ செலவிலும் இரு நாட்டு விஞ்ஞானிகளின் ஆலோசனையின் பிரகாரமும் பிரான்ஸின் வால்டக் பகுதியில் அமைக்கப்படவுள்ள அணுப்பரிசோதனை நிலையத்தில் 2014 இல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால அணுத்திட்டத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருப்பு தொடர்பில் இரு நாட்டு விஞ்ஞானிகளும் தம்மால் இயன்ற சேவையை வழங்குவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இருநாடுகளும் வரவு-செலவுத் திட்டத்தில் செலவின குறைப்பை மேற்கொள்ள வேண்டிய அழுத்தத்தை எதிர்கொண்டுள்ள நிலையிலேயே பாதுகாப்பு விவகாரத்தில் மிகவும் நெருங்கிச் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளன.

வளப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள இருநாடுகளும் உலகில் முக்கிய வகிபாகத்தை வகிக்க விரும்புவதன் அடிப்படையிலேயே இவ் உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கைகளின் பெரும்பாலான விடயங்கள் தொழில்நுட்பத்துறையில் மிக நெருங்கிச் செயற்படுவதையே நோக்காகக் கொண்டுள்ளன.

அணுவாயுத தொழில்நுட்பத்தில் பிரிட்டனில் அபிவிருத்தியும் பிரான்ஸில் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனினும் ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு நாடும் தமது சொந்தத் தொழில் நுட்பத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

ஈரான் மற்றும் வடகொரியாவின் அணுநிகழ்ச்சித் திட்டம் உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையிலேயே அணுத்தொழில்நுட்பத்தில் மிக நெருங்கிச் செயற்படுவதற்கான இந்நாடுகளின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஈரான் மற்றும் வடகொரியாவின் அணு நிகழ்ச்சித்திட்டமானது உலகுக்கே பாரிய அச்சுறுத்தலெனக் கூறி அந்நாடுகள் மீது கடுமையான தடைகளை அமுல்படுத்தி வரும் பிரிட்டன்,பிரான்ஸ்,அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் அந்நாடுகள் மீதான இராணுவ நடவடிக்கை குறித்த ஊகங்களையும் நிராகரிக்கவில்லை.

ஏற்கனவே அணுவாயுத வல்லமையைக் கொண்டுள்ள இவ் வல்லரசுகள் அவற்றை விருத்தி செய்வதற்கான திட்டங்களை பகிரங்கமாக மேற்கொண்டு வரும் நிலையில் வளர்ந்துவரும் நாடொன்று அணுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது கூட தவறானது என்பதே இன்றைய உலக நீதியாகவுள்ளது.

ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுவாயுதத்தின் கோரதாண்டவத்தை நேரில் கண்ட பின்னரும் கூட அவற்றை அபிவிருத்தி செய்வதிலேயே வல்லரசு நாடுகள் முனைப்புக்காட்டி வருவதை கண்கூடப் பார்க்க முடிகிறது.


இதிலிருந்து ஒன்றைத் தெளிவாக உணர முடியும்.அதாவது அணுத்தொழில் நுட்பத்தின் ஏகபோக உரிமையும் தமக்கே உரித்தானது என்ற வல்லரசு நாடுகளின் மனோபாவமே ஏனைய வளர்ந்துவரும் நாடுகள் அவற்றைப்பயன்படுத்துவதை தடுப்பதற்கான அணுவாயுத ஒழிப்புக் கோஷங்களாக வெளிப்படுகிறது.

இதன்மூலம் உண்மையான உலக அமைதியை ஏற்படுத்தும் ஆர்வமும் பேரிழப்பைத் தடுப்பதற்கான சிந்தனையும் இவர்களிடம் இல்லை என்பது புலனாகிறது. இருந்திருந்தால்அணுவாயுத ஒழிப்புக்கான உடன்படிக்கைகளை அல்லவா இவர்கள் ஏற்படுத்தியிருப்பார்கள்? இதைத்தான் சாத்தான் ஓதும் வேதம் என்பதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










பிந்து மாதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.